[illegible]

[illegible] /12 [illegible] 12

15 June 1927


3L
[illegible]211, N15[illegible]
[illegible]27·12·12
182481

ஓம்
பரப்பிரஹ்மணேநம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

| தொகுதி | பிரபவஹ ஆனிமீ கஉ | பகுதி |
| --- | --- | --- |
| 12 | 1927ஹ ஜூன்மீ 15உ | 12 |

## கடவுள் வணக்கம்.

அண்டபகி ரண்டமும் மாயாவி காரமே
யம்மாயை யில்லாமையே
யாமெனவு மறிவுமுண் டப்பாலு மறிகின்ற
வறிவினை யறிந்து பார்க்கின்
எண்டிசை விளக்குமொரு தெய்வவரு ளல்லாமல்
இல்லையெனு நினைவுமுண்டிங்
கியானென தறத்துரிய நிறைவாகி நிற்பதே
யின்பமெனு மன்புமுண்டு
கண்டன வெலாமல்ல வென்றுகண் டனைசெய்து
கருவிகர ணங்களோயக்
கண்மூடி யொருகண மிருக்கவென் றுற்பாழ்த்த
கர்மங்கள் போராடுதே
பண்டையுள கர்மமே கர்த்தா வெனும்பெயர்ப்
பக்ஷநா னிச்சிப்பனோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே. (1)

நானென் றொருமுத லுண்டென்ற நான்றலை நாணவென் னுட்
டானென் றொருமுதல் பூரண மாகத் தலைப்பட்டொப்பி
லானந்தந் தந்தென் னறிவையெல் லாமுண் டவசநல்கி
மோனந் தனைவிளைத் தாலினி யாது மொழிகுவதே. (2)

நாதனை நாதா [illegible] நின்ற
நீதனைக் கல[illegible] வென்றால்
வாதனை [illegible]யன்னை வசஞ்செய்து மனந்துன் மார்க்க
போதனை [illegible] னன்றோ பூரணா னந்த வாழ்வே. (3)

## அரும்பொருள் விளக்கம்.

1. சாகோப சாகாதிகளேயுடைய விருக்ஷத்திற்குச் சூக்குமமாகிய வித்து காரணமாவதுபோல ஸ்தூலமாகிய பிரபஞ்சத்திற்கு சூக்குமமாகிய மாயை காரணமாதலின் 'அண்டபகிரண்டமும் மாயா விகாரமே' என்று கூறப்பட்டது. இது சூனியோபாதானங் கூறு மாத்துமிகரைக் கண்டித்த வாறும். காரணகாரிய ரூபமாயிருப்பதெதுவோ அது மாயையாம். இங்கு 'இல்லாமை' யென்றது காரியப்பாட்டை நோக்கியென்க. சூனியம் என்னும் பொருள் படவன்று. க்ஷணிகவாதிகள் மதம் இதனாற் கண்டிக்கப்பட்டதாம்.

மாயை சடமாதலின் அது தானே காரியப்படுமோ என்பதை விசாரிக்க 'அறிந்து பார்க்கின்' என்றார். மாயை உணர்ச்சியற்றது; சேதனப்பொருளிற் செல்லாதது; அதனைக் காரியப்படுத்த ஒரு முதல் வேண்டும்; ஆதலின் 'தெய்வ வருளில்லாமலில்லை' என்று சொல்லப்பட்டது.

தனுகரண புவன போகங்களனைத்தையும் ஆன்மாக்களின் பொருட்டு மாயையினின்றும் காரியப்படுத்தலாதிகளைச் செய்தல் இறைவனது அருளே யாகையால் அவ்வாறுரைக்கப்பட்டது.

யான் எனது என்னும் செருக்கு ஒழிந்தாலல்லது இன்பமடைதல் கூடாதாகலின் 'யானெனதறத்துரிய...மன்புமுண்டு' என்னப்பட்டது.

நேரிற் காணப்படுவன வெல்லாம் அறியுந்தன்மையவாகலின் 'கண்டன வெலாமல்ல' என்றார்.

நிஷ்டை கூடவேண்டுமாயின், செயலற்றுத் தன்னந்தனியே யிருந்து கண்மூடியிருக்கவேண்டுமாதலின், 'கருவி...யொருகணமிருக்க' வென்றார்.

ஆன்மாக்களுக்குக் கன்மம் அனாதியாகலின் அது புத்தி தரும ரூபமாயிருந்து, சுகதுக்கங்களை விளைவித்துக் கொண்டேயிருக்குமாகையால் 'கன்மங்கள் போராடுதே' என்றார். போராடுதே என்பது ஒருமைப் பன்மை மயக்கம். பண்டை யென்றது பிராரத்துவமெனக் குறித்தற்கு. கருமவாதிகள் கருமத்தினையே கடவுளென்பாராகலின் 'கர்மமே கர்த்தாவெனும் பெயர்' என்றார். "செல்லு முடலிற் செய்த சடமாங்கன்மஞ் சென்று முத்திகொடுப்பதெங்கே தீங்கைவிடாய் நீயே" என்கிறபடி அக் கன்மவாதிகள் கண்டிக்கப்பட்டனராகலின் 'நானிச்சிப்பனோ' என்றார்.

2. 'நான்' என்னும் ஒரு முதல் உண்டு என்ற நான், என்பது அறிவிலாமையாகக் கிடந்தநாளாகும். அங்ஙனமிருந்த எனைக் கண்டு இறைவன் வலிய ஆட்கொண்டான் என்று இப்பாடலில் வியந்து கூறுகின்றார். அவசம் - பரவசம்.

3. ஒருவன் மனத்தின் வழியே தன்னை நடத்தின் இருவினைக் குள்ளாவன்; தன்வழியே மனத்தை நடத்தின் இருவினை யொப்புக்குள்ளாவன் ஆகலின், இறைவனே! என்மனம் நின்னையடைய என்வழிவாராது என்னைத் தன்வழியிழுத்துத் தீய நெ[illegible] அழகோ என்று இப்பாடலில் கூறுகின்றார்.

நாதாதீத - நாத அதீத ([illegible] தத்துவங்களுக்கு[illegible]த.)

18748

# ஆனந்தபோதினி

பிரபவவருஷ

ஆனிமீ௴ ௧௨

## ஆப்கானிய அரசரின் தற்கால அரசியல்.

முற்காலத்தில் உலகத்தை ஆண்டுவந்த மன்னர்களில் பெரும்பான்மையோர் அறநெறி வழுவாமல் அரசுபுரிந்து வந்த விதம் மிக்க் கொண்டாடத்தக்கது.

"மாநிலங்கா வலன்என்பான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ"

என்ற செய்யுளிற் கூறியபடி அவர்கள் தம்முடைய் ஆளுகைக்குட்பட்டவர்களுக்குத் தம்மாலும், தம்மைச் சார்ந்தவர்களாலும், பகைவராலும், திருடராலும், வேறு துஷ்ட பிராணிகளாலும் இடையூறு நேராமல் நலஞ்செய்து அவர்களைக் காத்துவந்தார்கள். வரியிறைகளை அதிகப்படுத்தியோ, நியாயவிரோதமான தண்டனை விதித்தோ அவர்களைத் துன்புறுத்தமாட்டார்கள்; தம்மைச்சார்ந்த பரிசனங்களாகிய உத்தியோகஸ்தர்கள், தங்களுடைய அதிகாரத்தைக்கொண்டு குடிகளுக்கு இடுக்கண்புரிந்து பயமுண்டாக்கி அவர்களுடைய பொருள்களை அக்கிரமமாகக் கவரவோ, அவர்களைத் துன்புறுத்தவோ சிறிதும் இடங்கொடுக்க மாட்டார்கள்; பகைவரால் தம்குடிகளுக்குத் தீங்குநேரின் உடனே அதனை நீக்குவர்; திருடரால் குடிகளின் பொருள்கள் கவரப்படின் உடனே அத்திருடர்களைக் கண்டுபிடித்துத் தண்டித்து, அவர்களால் கவரப்பட்ட பொருள்களைக் குடிகளுக்கு மீட்டுக் கொடுப்பார்கள்; துஷ்டப் பிராணிகளால் குடிகளுக்கு அபாயமுண்டாவதாயிருந்தால் அப்பிராணிகளை யொழித்து அத்தீங்கினை யகற்றுவார்கள்; இன்னும் அக்கிரமத்தாலும், பணக்கொழுப்பாலும், தேகத்திமிராலும் செருக்குற்றோர், வலியிழந்த ஏழைகளை வருத்தவிடமாட்டார்கள்; குற்றஞ் செய்தார் தம்மவரேயாயினும் பாரபக்ஷமின்றி அவரைத்

தண்டிப்பார்கள்; நீதிவிசாரணையில் கண்ணும் கருத்துமாயிருப்பர்; தங்களுடைய பிரதிநிதிகளாகிய அதிகார வர்க்கத்தினரும், கீழ் உத்தியோகஸ்தர்களும், சேவகர்களும் நீதிதவறாமல் தங்கள் கடமைகளைச் சரிவரச்செய்து வருகிறார்களா என்பதை அதிக கவனத்துடன் கவனித்து வருவார்கள்; குற்றங்களின் உண்மைகளை உள்ளபடி கண்டுபிடிப்பதற்கு அரும்பாடு பட்டுவந்தனர்; மாறுவேடந்தரித்துச் சாதாரண ஜனங்களுடன் இரவிலும் பகலிலும் கலந்து திரிந்து நகர்சோதனைசெய்து காரிய நிகழ்ச்சிகளின் உண்மைகளைக் கண்டுபிடித்து நீதித்தீர்ப்பளிக்கும் அரியபெரிய முறையைக் கைக்கொண்டிருந்தனர்; மனிதர்கள், பணச்செலவும் தேகப்பிரயாசையும், மனோ வேதனையும் இன்றிக் கீழ் உத்தியோகஸ்தர்களிடத்திலும், பெரிய அதிகாரிகளிடத்திலும், தம்மிடத்திலும் தங்கள் குறைகளை அப்போதைக்கப்போது எளிதில் தெரிவித்து நியாயம் பெற்றுக்கொள்வதற்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் ஏற்படுத்தியிருந்தார்கள். தெய்வவணக்கம், கல்வி, தானதர்மங்கள், கைத்தொழில், வியாபாரம் முதலியவை விருத்தியாவதற்கான பற்பல அற்புத முறைகள் அவர்களால் அமைக்கப்பட்டிருந்தன; உண்மையான கல்வியாளர்கள் கொண்டாடப்பட்டார்கள்; அவர்களாற் செய்யப்பட்ட உண்மையான கவிகளும், உண்மையான நூல்களும், போலித்தன மற்ற உண்மைத்தொழிலாளரால் செய்யப்பட்ட மெய்த்தொழில்களும், உண்மைச் சங்கீதமும் கொண்டாடப்பட்டு வந்தன; உண்மைப்புலவர்க்கும், மெய்த்தொழிலாளர்க்குமே பட்டங்களும் பரிசுகளும் அளிக்கப்பட்டு வந்தன. இன்னும் தொன்மை மன்னர்கள் மண்ணுலகத்தார்க்குச் செய்துவந்த நலங்களும், அறங்களும் பலவுள. முன்னோர்களால் இயற்றப்பட்ட பன்னூல்களால் அவற்றை நன்குணரலாம்.

இவை, சிறந்தனவாதலினாலே, இவற்றுள் சிறுபான்மையன பழையன கழிதலாக நீங்கியிருப்பினும் பெரும்பான்மையன இக்கால அரசியல்களிற் கொள்ளப்பட்டே வருகின்றன.

இம்முறைகளில் முக்கியமான சிலவற்றை இப்போது ஆப்கானிஸ்தானத்தின் அரசராகிய அமனுல்லாகான் கைக்கொண்டிருக்கின்றார். தம்முடைய நாட்டை, ஜப்பானைப்போல் சிறப்புடையதாகச் செய்யக் கருதி, காலஞ்சென்ற ஜப்பான் மிகாடோவைப்போல் அநேக சீர்திருத்தங்களைச் செய்து வருகிறார்; மேனாடுகளுக்குச்



சமமாகத் தம்முடைய நாட்டையும் செய்துவிட வேண்டுமென்று அநேக துருக்கியர்களை வேலைக் கமர்த்தியிருக்கின்றார்; வியாபாரம், கைத்தொழில் முதலியவை சம்பந்தமான சீர்திருத்தங்களைச் செய்வதற்கு அமெரிக்க நிபுணர்களையும், ஜெர்மானிய நிபுணர்களையும் நியமித்திருக்கின்றார்; சிலாசாசன ஆராய்ச்சி நடைபெறத்தக்க ஏற்பாடும் செய்திருக்கின்றார்; தம்முடைய நாட்டு வியாபாரம் பங்கமடையாதபடி அதிற் கவனஞ் செலுத்திவருகின்றார்; அன்னியநாட்டுச் சாமான்களின் இறக்குமதிக்கு அதிகம் வரிவிதித்திருக்கின்றார்; தேசவிஷயங்களைக் கவனிப்பதற்கு பிரபுக்கள் சபை ஒன்று, பிரதிநிதிகள் சபை ஒன்று ஆக இரண்டு சபைகளை ஏற்படுத்தியிருக்கின்றார்; வாரத்திற்கு ஒருநாள், பிரஜைகள் தங்களுக்கு நேருங் குறைகளைத் தம்மிடம் நேரில் விண்ணப்பித்துக் கொள்ள எல்லோருக்கும் அனுமதிகொடுத்திருக்கிறார். தம்முடையநாட்டில் உண்டாகும் ஆடையையே அணிந்துகொள்கிறார்.

இவற்றுளெல்லாம், குடிகள் வாரத்திற் கொருமுறையேனும் தம்மிடம் கேரில் தங்கள் குறைகளைத் தெரிவித்துக்கொள்ள அனுமதிகொடுத்திருப்பது மிகவும் கொண்டாடத்தக்கது; அரசராயினார் முக்கியமாகக் கைக்கொள்ளத்தக்கது; பண்டைக் காலத்து மன்னர்களின் வழக்கங்களை அனுசரித்தது.

இதுபோன்ற நீதிகள் எந்த ஆட்சியில் அமைந்திருக்கின்றனவோ அதில் குடிகளுக்கு மிகுந்த விசுவாசமுண்டாகும்; அவ்வாட்சியானது பலவகையிலும் விருத்தியடைந்து பல அறிஞராலும் கொண்டாடப்படும். அவ்வாட்சிக்குட்பட்ட பிரஜைகள் எக்காலத்தும் இடரின்றி இன்புற்று வாழ்வார்கள். இத்தகைய செங்கோலானது என்றும் நிலைபெற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவார். ஏழைமனிதர், பணச்செலவும், பலவிதத் துன்பமுமின்றி அதிகாரிகளிடம் தங்கள் குறைகளை முறையிட்டு நியாயம் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்திருப்பது சிறந்த நீதியாகும். பயிர்கள் மழையின் ஆதரவைப்பெற்றுச் செழிப்பது போலக் குடிகள் அரசரின் ஆதரவைப்பெற்று வாழக்கூடியவர்களாயிருக்கிறார்கள். ஆதலின், ஆட்சியாளர் எக்காலத்தும் குடிகளுக்குத் துன்பமின்றி அவர்மீது அன்புசெலுத்தி வருதலே சிறந்த செங்கோன் முறைமையாகும்.

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு"

ஓம் தத் ஸத்.




## தாதாபாய் நௌரோஜி.

(491-ம் பக்கத் தொடர்ச்சி.)

இந்திய அரசாங்க உத்தியோகஸ்தர்களின் குறைகளை விசாரிப்பதற்காக 1887-ம் ஆண்டில் ஓர் சபை அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டது. அதில் நௌரோஜி தமது அபிப்பிராயத்தைக்கூறி அவ்வுத்தியோகஸ்தர்களின் சம்பளம் உயர்த்தப்படவேண்டுமென்று வற்புறுத்தினார். ஒருமுறை சீமையில், தேர்தலில் நின்று அபஜெயமடைந்ததைக் குறித்து அவர் விசனப்படவில்லை. முயற்சியுடையவர் இகழ்ச்சியடையாராதலின் மறுமுறையும் அவர் சீமைக்குச் சென்று பாராளும் மன்றத்தின் அங்கத்தினர் பதவிக்கு அபேக்ஷகராக நின்றார். 1892-ல் முயற்சி திருவினையாக்க 'ஸெண்ட்ரல் பின்ஸ்பரி' என்ற பாகத்தின் பிரதிநிதியாக பெரியார் இவரைத் தேர்ந்தெடுத்து 'பார்லிமெண்ட்' சபைக் கனுப்பினர். அந்த ஸ்தாபனத்தில் இவரது ஊக்கத்தால் இந்தியர் விஷயங்களை அவ்வப்போது கவனிக்க இந்தியப்பாராளுமன்றப் பிரிவுசபை (Indian Parliamentary Committee) என்ற பெயருடன் ஓர் கிளைச்சபை நிருபணஞ் செய்யப்பட்டது. அக்கமிட்டியின் வாயிலாக இந்திய நாட்டின் நலத்தை இயன்ற அளவு தாதா பெருக்கிவந்தார். இந்தியர் சிவில் சர்விஸ் (Indian Civil Service) க்கு இந்தியர்களையுஞ் சேர்த்து ஏககாலத்தில் பரீக்ஷை செய்யப்படவேண்டுமென்ற தீர்மானம் ராஜாங்கத்தாரால் புறக்கணிக்கப்பட்டும், பெரும்பாலான வாக்குகளால்—இவரது முயற்சியால் பாராளுமன்றத்தில் சீராக ஏற்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் வரவு செலவு திட்டங்களைக் கவனிக்கும் நோக்கத்துடன் பாராளுமன்றத்தின் விசேஷ விசாரணைப் பிரிவுச் சபையொன்று ஏற்பட்டது. அதன் சார்பிலும் நௌரோஜி நன்குழைத்துத் தாய்நாட்டிற்குத் தொண்டுபுரிந்து வந்தார். 1893-ம் வருடத்தில் அவர் பாரதபூமிக்குத் திரும்பி வந்தார். அப்போது லாகூரில் கூடியஅகில இந்திய தேசீய

### காங்கிரஸில் அக்கிராசனம்

வகிக்கும்படி அவரைத் தேசபக்தர்கள் வேண்ட அதனை அவர் மகிழ்ந்து ஏற்றார். தேசபக்திக்கே தாயகமான அவருக்கு மக்கள் மலர் மாலையிட்டும், புகழுரை கூறியும் தமதன்பைச் செலுத்தினர். பொது ஜனங்கள் தமதளவு கடந்த அபிமானத்தால் அவர் ஊர்வலம் வந்த இரதத்தைத்தாமே இழுத்துச் சென்றனர். அரசருக்கும் இத்துணைச் சிறப்பு நடந்திராதென்று கூறுவதும் இத்தகைய தேசபக்தர் விஷயத்தில் மிகையாகாது. அக்காங்கிரஸில் "இந்தியர்களின் கல்விக் குறைவாலேயே தேசம் அடிமைப்பட்டதென்றும், பரத



நாட்டின் ஏழ்மையைக்கருதி இலவசக் கல்வி யளிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் அவர் செய்த விரிவுரையால் கல்வி விஷயத்திலும், ராஜீய பிரசினைகளிலும் ஜனங்களுக்கோர் புதிய ஊக்கமேற்பட்டது. 1895-ம் வருடத்தில் இங்கிலாந்தில் மீண்டும் நாடாளு மன்றத்தேர்தல் நடைபெற்றது. நௌரோஜியவர்கள் ஆதரித்த உதாரக் கக்ஷிக்கு அங்கு அச்சமயம் அதிக செல்வாக்கில்லாததால் அவர் மன்ற அங்கத்தினராக ஏதுவில்லாமற் போயிற்று. ஆயினும், அவர் எவ்விதமாவது தேசகைங்கர்யம் புரியவேண்டுமென்ற கொள்கை யுடையவராதலாலும், போலிக் கௌரவங்களைப் போற்று மியல் பற்றவராதலாலும், மனந்தளராது தொண்டுபுரிந்து வந்தார். அதற்கடுத்து வந்த தேர்தலிலும் குறுகிய நோக்கமுடைய கக்ஷியாரின் பலத்தால் அவர் பாராளுமன்றத்தில் பதவிபெற இயலவில்லை. 1906-ம் ஆண்டில் பாரததாய் அவரது தேசத்தொண்டைப் புகழ்ந்து அழைக்க, தாதா சீமையைவிட்டு நீங்கிப் பம்பாய் நகரை யடைந்தனர். பம்பாயில் அவருக்கு விசேட வரவேற்பு-உபசரணைகள் நடந்தன. அவ்வாண்டு கல்கத்தாவில் கூடிய அகிலபாரத காங்கிரஸ் மஹாசபைக்கு அவர்

### மூன்றும் முறை அக்கிராசனம்

வகித்தார். அவர் இங்கிலாந்திலிருந்து இந்திய விஷயங்களை அரசாங்கத்தார் எத்துணைச் சிரத்தையுடன் கவனிக்கின்றனரென்பதை அனுபவத்தாலுணர்ந்தவராதலால் அத்தேச மகாசபையில் "இங்கிலாந்தும் இந்தியாவும்" என்பது பொருளாக ஓர் சொற்பொழிவு நிகழ்த்தி இந்தியர்களுக்குச் சுய ஆட்சியின் அவசியத்தை யெடுத்துக் காட்டினர். "சுயராஜ்ய வாழ்வே சுகவாழ்வு" ஆமென்ற உண்மையை முதல் முதலாக மக்களிடத்தில் பரப்பியவர் அவரே. 1907-ல் மறுமுறையும் ஸ்ரீமான் நௌரோஜி சீமைக்குச் சென்றார். அவர் மேனாட்டிலிருந்தே இந்தியாவுக்குத் தொண்டுபுரிய விரும்பினாராயினும், வயோதிகத்தால் அசக்தியும், நோயும் வந்துற, வைத்தியரின் நல்லுரைக் கிணங்கி, தாய்நாட்டை யடைந்தார். பின்னர், பம்பாய் நகரத்திலேயே தேச சேவையை முன்னிட்டுச் சில மாதங்கள் வசித்தார். மூப்பு முதிர, அவர்

### ஏகாந்த வாழ்வு

விரும்பி, பம்பாய்க்குச் சமீபத்திலுள்ள வெர்சோவா வென்னுஞ் சிற்றூரில் வசித்து வந்தார். அப்பொழுதும் அவர் பத்திரிகைகளின் வாயிலாகத் தமது தொண்டை (கடமையை)ச் செய்யாதிருக்கவில்லை. அளவுக்கு மிஞ்சி யுண்ணாமையும், மத அனுஷ்டானமும், குறித்த அளவில்—நேரத்தில் குறிப்பிட்ட வேலையைச் செய்யும் வழக்கமும், லாகிரி வஸ்துக்களைப் புறக்கணிக்கும் தன்மையும் அவரது ஆயுட்காலத்தைப் பெருக்கின. அத்துணை வயோதிகத்திலும் அவரது குன்றாத தேசசேவையை ஜனங்கள் புகழ்ந்து போற்றினர். அவருடைய சோர்வற்ற ஊழியம் மக்களிடத்தில் ஒப்பற்ற உற்சாகத்தையும் ஊக்கத்தையும் விருத்திசெய்தது. 'காங்கிரஸ்' என்ற சொல்லை யுச்சரிக்குங்கால் ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜியின் திருநாமத்தை நாம் சிந்தியா

திருக்க வியலாது. அவருடைய தேசபக்தியின் பெருமையைக் கூறித்தானாக வேண்டும். இனி, அவரது

## ஜீவியத்தின் மாலைக் காலம்

எவ்விதம் கழிந்ததெனக் கூறுவாம். 1915-ல் அவர் தமது புத்தகசாலையைப் பம்பாய் மாகாணச் சர்வகலாசாலைச் சங்கத்தாருக் கீந்துதவினார். அதில் அரசாங்க விஷயமான பல அரிய நூல்கள் அடங்கியிருந்தன. 1916-ல் பம்பாய் சர்வகலாசாலையார் அவருக்கு L. L. D. பட்ட மளித்தனர். வயது அதிகமாகவே, தள்ளாமையால் தமது உடல் நலங் குன்ற, நௌரோஜி வைத்தியார்த்தமாக பம்பாய்க்குவந்து சிகிச்சைசெய்துகொண்டார். தளர்ந்த உடலில் அவருக்கு மருந்து பிடிக்கவில்லை. 1917-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் தேதி தாத்தாவாகிய தாதா அவரது 91-ம் பிராயம் 9-வது திங்கள் 26-ம் நாளில் விண்ணவர்களின் விருந்தினராயினர்.

## குணானுபவங்கள்

தாதா சிறந்த மதப்பற்றுடையவர். அவருடைய ஒழுக்கங்கள் அவருடைய தாய்மதமான சூரியனை ஆராதிக்கும் ஜொராஷ்டிரமதத்தின் கொள்கைகளை யனுசரித்தனவாகவே யிருந்தன. அவர் ஜீவிய காலத்திற்குள் மகா கனந் தங்கிய நான்காவது ஜியார்ஜ் மன்னர், விக்டோரியா மஹாராணியார், ஏழாம் எட்வர்ட், ஐந்தாம் ஜார்ஜ்மன்னர் ஆகிய நால்வர் அரசாட்சியும், பத்தொன்பது ராஜப்பிரதிநிதிகளின் பரிபாலனமும் நடைபெற்றன. அவருடைய தேச சேவையின்காலம் 1845-முதல் 1917-வரை எழுபத்திரண்டு வருடங்களாகும். ஸ்ரீமான் நௌரோஜிக்கு ஒரு புத்திரரும் இரண்டு புத்திரிகளுமுண்டு. அக்குடும்பத்தார் இன்னும் காஷ்மீரத்தில் வசித்து வருகின்றார்களாம்.

அவருடைய சிறந்த தேசா, பாஷா, மதாபிமானங்களை மெச்சிய ஜொராஷ்டிர மத குருவானவர் ஸ்ரீமான் நௌரோஜியை மஹான்கள் கூட்டத்தி லொருவராகச் செய்தனர். அவர் அன்று இந்தியருள்ளத்தில் விதைத்த தேசபக்தியே இன்று மரமாகிப் பரவி நிற்கின்றது.

S. V. வாதராஜய்யங்கார், சரஸ்வதி நிலயம், உறையூர்.

---

## மாதரின் தேசபக்தி.

'ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்' என்பது பழமொழி. குடும்ப விஷயத்திலும், மதாசார அனுஷ்டான வகையிலும், கர்மாதி சுதர்ம விஷயங்களிலும், தேசாதி பாஷாபிவிருத்தியிலும் ஆடவரின் ஈடுபாட்டிற்கு மாதரே தூண்டுகோ லாகி நிற்கின்றனர். அன்னோரிடத்தில் ஆடவரை ஆட்டவல்ல சக்தி பொருந்தியிருக்கின்றது. ஸ்திரீகள் தாயாகவும், தனையையாகவும், மனைவியாகவும், சகோதரியாகவும் நின்று ஆடவரின் அறிவைப் பெருக்கி வருகின்றனர். புருடர்கள் 'தாயிற்சிறந்த கோயிலுமில்லை', 'தாய்



சொற்றுறந்தால் வாசகமில்லை' என்ற அமுதமொழிப்படி தாம் தோன்றிய தாயகத்தைப் பூசிக்கவேண்டியது. அது அவர்களுடைய தர்மமாகின்றது. தனையை யிடத்துள்ள வாஞ்சையால் அவள் கூறுவது போற்றற்குரிய தல்லவாயினும் தந்தையர் அவளது பிரியப்படி எதையும் செய்து விடுகின்றனர். 'கணவன் மனைவி மனைவி நிலையைப்பற்றி நாமதிகம் கூறவேண்டுவதில்லை. 'கணவன் மனைவி யிவர் காணில் உயிருடம்' பாகின்றனர். இருநோக்குடைய மாதரின் இன்ப வலையிற் சிக்காதார் மிகச்சிலரேயாவர். 'உன்னையன்றித் தெய்வம் உலகினில் வேறுண்டோ' வெனக்கொண்டாடும் ஆடவர் பாரினி லெத்தனையோபேரிருக்கின்றனர். இனி, சகோதரிப்பான்மையை யுற்றுநோக்குங்கால் அவனியிலுள்ள மாதரனைவரும் சகோதரிகள் என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்தியது பாரதபூமியாதலின் அதனை நாமிங்கு விவரிப்பது மிகையேயாகும். ஆகவே நாம் பிரபஞ்ச வாழ்வில் தகுதிவாய்ந்த எவ்வித மனோபாவத்தால் நோக்கினும் மாதரின்றி யாதுமில்லை யென்பது நமக்கு அனுபவ சித்தாந்தமாம்.

பாரதபூமி மாதர் நிறைந்த இல்லம்! இப்புனித வீட்டில் கற்புக்கரசியர் பலர் திகழ்ந்தனர். தனையன் போரில் புறங்காட்டியோடாது வீரனாகிப் பகையாளின் வாளுக்கிரையாயினன் என்பதைக் கேட்டு மனமகிழ்ந்த வீரத்தாய்மார் பலர் இந்நாட்டில் விளங்கினர். கானம், தியானம், ஞானம், மானம் யாவும் பாரத மாதரிடத்தே தோன்றி நிலவின. அன்று மாதரால் சிறந்த பாரதபூமி அந்தோ! இன்று பேதைமை நிறைந்ததா யிருக்கின்றது. உணவிலும் உடையிலும், உல்லாசத்திலும், பேச்சிலும் ஏனைய ஒவ்வொன்றிலும் நாகரீகம் கலந்து, நாடுகெட நவீனம் முற்பட்டது; காற்று முதல் கலந்தது நவீனம்; போற்று மிப்பூமியில் புகுந்தது மதியீனம்; நன்மைக்கிடமான இந்நாட்டில் புதுமை புறப்பட்டுப் புகழையடக்கிப் புன்மையைத் தொடுக்கின்றது. இக்கொடுமைகளுக்குத் தாளாத பாரத அன்னை கண்ணீர் வடிக்கும் பள்ளத்தாக்காயிற்று நம்நாடு!

ஆதலின் தேச முன்னேற்றத்தைக்கருதி சக்தி ஸ்வரூபமான ஸ்திரீகள் அசத்தியை எதிர்த்து முன்வரவேண்டும். பிரபஞ்ச உற்பத்திக்கே காரணராய் விளங்கும் அம்மாதரிடத்தே தேசசேவை புத்துயிர் பெற்றெழவேண்டும். கீர்த்தியையும், பதவியையும் விரும்பிப் பேச்சிலொன்றும், உள்ளத்தில் மற்றொன்றுமாகக் குறுகிய நோக்கத்துடன் தேசபக்தரெனத் திரிவோரை மாதர்கள் தமது வல்லமையால் உண்மைத் தேசாபிமானிக ளாக்கவேண்டும்; தேசாபிமானமே யற்றவர்களுக்குத் தமது இன்பவசனாம்ருதத்தில் அதைக் கலந்தூட்டவேண்டும்; தாம் கதருடுத்திக் காந்திநாள் கொண்டாடி ஆடவரை அவ்வழித்திருப்பவேண்டும்; மதுபானத்தால் துட்டுச் செலவிட்டுக் கெட்டலைந்து வறியராகும் புருடர்களைத் தம் நுட்ப அறிவால் ஸ்திரீகள் நல்வழிப்படுத்துதலும் சிரமமன்று. சமத்துவத்தையும், சகோதரத்வத்தையும் பெருக்கி, நமக்குள் எவ்வித ஜாதிமதக்கலவரமு மற்று ஒற்றுமைப்பட முயலுதல் ஸ்திரீகளின் முக்கிய நோக்கமாயிருக்கவேண்டும். ஒரு சீதையால் இராவண யுத்த

மும், ஒரு திரௌபதியால் பாரதப்போரும் நிகழ்ந்தன. அத்தகைய பத்தினிப் பெண்டிரே அவ்வாறானல் நாம் சண்டை கிளப்புவது குற்றமாகுமா? என்ற ஆக்ஷேப சமாதானங்களை ஸ்திரீகள் அடையலாகாது. மேற்கூறிய புராண சம்பவங்கள் தர்மஸ்தாபனார்த்தமாக நிகழ்ந்தனவென் றவர்களுணர வேண்டும். வல்லவனையும் சொற்படி நடக்கச் செய்துவிடுஞ் சக்தியுடைய மாதர்சமூகம் தேசக்ஷேமத்தை நினைந்து ஆடவரைத் தம்வழி திருப்புதல் பிழையெனப்படாது. நன்மை பயக்கக்கூடிய விஷயங்களில் மடவார் தமது திறனை—சாமார்த்தியத்தை—சாஹஸத்தை உபயோகித்தல் சாலச்சிறந்தது.

பெண்டிர் காங்கிரஸின் நோக்கங்களை யாதரித்துத்தான் நாட்டின் மேன்மைக்குப்பாடுபட வேண்டுமென்பது தாத்பரியமல்ல. வீட்டிலிருந்தே அவர்கள் எவ்விதத்தொண்டு புரிய வியலுமோ அவற்றைச் செய்தலே போதுமானது. மதாசார தேசாசார விஷயங்களிலும், குலாசார ஒழுக்கங்களிலும் தீயன போக்கி நல்லவை ஓர்ந்து செய்யின் அதுவும் தேசசேவையே யாகும். தாய் நாட்டின் எழில் பெருகும் வழிகளில் ஸ்திரீகள் தேச கைங்கர்யம் செய்தல் உத்தமம். சிறு வீட்டிலுள்ள ஒவ்வொருவரிடத்திலும் இயற்கையாகத் தேசாபிமானம் எழவேண்டும். அன்னிய நாட்டிலிருந்து வருவனவும், அயல் நாட்டு முறைகளாலுண்டாக்கப் படுகின்றனவுமான 'சோப்' பை உபயோகிப்பதை யொழித்து தாய் நாட்டில் நமது மூதாதையர் கொண்ட மஞ்சளைக் கொள்ளலும், பிறதேசங்களினின்றும் வந்துறும் வாசனைத் தைலங்களை விலக்கி, நமது ஆரிய முறையாற் செய்யப்படும் தைலங்களை யாதரித்தலும் பெண்டிரின் முக்கிய கடனும். 'மஸ்லின்' துணியிலுள்ள மயக்கமொழிந்து மஹாத்மாவின் மணிமொழிகளுக்குச் செவிசாய்த்து மாதர் கதராடை தரிக்கவேண்டும். அயல் நாட்டுப் பொருள்களை பஹிஷ்கரிக்க வேண்டுமென்பது நமது கருத்தல்லவாயினும் உள்நாட்டுப் பண்டங்களை ஆதரிப்பது நமது கடமையென்பதை யவர்களுணரவேண்டும். பெண்குழந்தைகளுக்குத் தாய்மார்கள் ஆபாசமான பாட்டுகளைச் சிறுவயதிலிருந்தே கற்பிக்கின்றனர். தேசாபிமானம் சிறு பிராயத்திலிருந்தே பெருக அன்னைமார் தமது சிறுமிகளுக்குத் தேசீய கீதங்களைக் கற்பிக்கவேண்டும். அக்கீதங்கள் பெண்களின் கும்மிபோன்ற கேளிக்கைகளுக்குத் தக்கவாறே அமைந்திருக்கின்றன. மற்றும் மாதர் வீட்டு வேலைகளைச்செய்யும் நேரம் போக, வீண்பொழுது போக்கி ஊர்வம்பாடி யுழலும் புராதன வழக்கத்தைவிட்டு, புது நாகரீகமாக இராட்டினத்தைக்கொண்டு நூல் நூற்க வேண்டும். அது 'தாகத்திற்குத் தண்ணீர் பருகினதுபோலும் தம்பிக்குப் பெண்பார்த்ததுபோலும்' ஆவதுடன் நாலுகாசு கிடைத்ததாகவும், நாட்டிற்கு நன்மைபுரிந்ததாகவும் ஆகும்.

சகோதரிகளே! 'தாய் நாட்டிலன்பிலார்க்குத் தருமமில்லை; கருமமுமில்லை என்பது இசை வாக்கியம். உங்களைத் தேச சேவைக்கழைக்க, கல்வியிலும், புத்தியிலும், செல்வத்திலும், ஒழுக்கத்திலும் உயர்ந்த உத்தமி ஸ்ரீமதி சரோஜினி தேவி முன்வந்தது உங்கள் சமூகஞ் செய்த தவப்பயனே யாகும்.



சீமைக்குச் சென்று பரீக்ஷைகளிற்றேறி நாட்டின் பரிதாபஸ்திதியைக்கருதி அடிகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தம் வாழ்நாட்களை யர்ப்பணஞ் செய்து. அரியதொண்டியற்றி, அகில இந்திய காங்கிரஸ் மஹாசபையில் அக்கிராசனம் பெற்று, வலிகுன்றுதோறும் அத்தேவியின் திவ்யமொழிகளைக் கேளுங்கள். உங்கள் சமூகமே அன்னையின் அறப்பணியிலாவல் கொள்ளட்டும்; வீணில் நீங்கள் நவீனங்கொண்டாடுவதிற் பயனில்லை.

ஆதலின் சகோதரிகளே! விழிமின்! எழுமின்! கருதியகருமங் கைகூடும் வரை உழைமின்! உணர்மின்! தேசத்தில் ஆனந்தம் பொங்க 'ஆனந்த போதினியின் பதின்மூன்றாமாண்டு தொடங்க, ஆனந்தத்தை வாசித்து ஆனந்தமடைய, பொங்கும் மங்களம் எங்கும் தங்க, அவன் திருவருளைப் போற்றுவாம்.

ஸ்ரீ. வே. வ. திருமுக்கீச்சுரம்.




## யோகம்.

(496-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிராணாயாமம் உத்தமம், மத்திமம், அதமம் என மூவகைப்படும். அதமம் பன்னிரண்டு மாத்திரையளவு. மத்திமம் இருபத்துநாலு மாத்திரை அளவுள்ளது. உத்தமம் முப்பத்தாறு மாத்திரை அளவுள்ளது. பனிரண்டு மாத்திரை யளவை ஒரு உத்காதம் என்றும், இருபத்துநாலை இரண்டு உத்காதமென்று பெரியார் கூறுவர். முப்பத்தாறு மூன்று உத்காதமாம். பிராணவாயுவினால் அபானவாயு பீடிக்கப்பட்டு மேல் எழும்பித் திரும்புகிறகாலம் உத்காதமென்னப்படும். இப்படிப் பிராணாயாமம் செய்வதால் முதல் வியர்வை யுண்டாகும். பிறகு சரீரநடுக்கம் உண்டாகும். புத்தி மயக்கமு முண்டாகும். இவை அடங்குகிறகாலமே யோகம் சித்தியாகிய உத்தமபிராணாயாமமாம். இந்த மாத்திரை பலபடியாகக் கூறப்பட்டிருந்தாலும் விரோதப்படாமல் ஒத்திருப்பதை ஊகித்து அறிந்துகொள்ளவேண்டும். பிராணாயாமம் சித்தியாகாவிட்டால் யோகசித்தியேயில்லை. பிரத்தியாகாரம் தாரணை முதலியவும் சித்தியாகாவாம்.

ஏனென்றால் பிராணாயாமத்தின் விருத்தியே பிரத்தியாகாரம், தாரணை, சமாதி, தியானங்கள் என்று பெயர் பெறுகின்றது. இதனால் பிராணாயாமமே யோகமென்று தெரிந்துகொள்ளலாம். பிராணாயாமம் பனிரண்டானால் ஒரு பிரத்தியாகாரமாகும். பன்னிரண்டு பிரத்தியாகாரம் ஒரு தாரணையாம். தாரணை பனிரண்டு சமாதியாம். சமாதி பன்னிரண்டு ஒரு தியானமாம்.

இதனாலும் பிராணாயாமமே யோகமென்று அறியலாம். ஆதலால் பிராணாயாமமே யோகமாமென்பது தெரிந்துகொண்ட ஒருவன் பிராணாயாமத்தைச் சிரத்தையோடும் பக்தியோடும் செய்யவேண்டும். இவ்வாறு பிராணாயாமஞ் செய்கிறவனுக்குத்தான் பிரமரந்திரவழி திறக்கும். பிரமரந்திரவழி திறந்தால் பிராணன் அதில் பிரவேசிக்கும். ஒரு முகூர்த்தகாலம் பிராணன் அதில் நிற்பது தாரணை. அறுபதுநாழிகை—ஒருநாள் நின்றால் தியானமாம். பனிரண்டுநாள் வரையில் பிரமரந்திரத்தில் பிராணன் நின்றால் அதுவே சமாதியாகும். இதன் விரிவு பின்னர்க் கூறப்படும். இந்த யோகம் இயமநியமாதிகளிலிருந்து நெறிதவறாமல் ஒழுகுகிறவனுக்குத்தான் சித்தியாகுமென்று நிச்சயமாய் அறியவேண்டும்.

இருதயஸ்தானத்தில் அநாகதச்சக்கரம் இருக்கின்றது. அது திலகம் போன்ற செந்நிறமுள்ள விந்துவுடன் கூடியது; க, வ, ழ, வ, ஊ, வ, ஊ, ஜ, ஸ, ஞ ட, ○ என்னும் பன்னிரண்டு எழுத்துக்களுள்ள பன்னிரண்டு இதழ்களை யுடையது. அதன்பொகுட்டில் புகைநிறமுள்ள, அறுகோண வடிவமான வாயுமண்டல மிருக்கின்றது. அதன் நடுவில் மின்னல் கொடிபோன்ற முக்கோணமுண்டு. அதன்மேல் யம் என்னும் வாயுபீஜம் இருக்கின்றது. அது கருநிறமுடையது; கிருஷ்ணமான்மே லேறியிருக்கும் புகைபோலும் கருநிறமுடையது; சதுர்ப்புஜமும் கையில் அங்குசமுமுடையது. அதன்மத்தியில் இரண்டு புஜங்களும் வரதாபய கரமுடையவராய் முக்கண்களுடையவராய் அன்னம்போன்ற வண்ணமுடையவராய் மஹேசன் இருக்கிறார். அக்கர்ணிகையின் நடுவில் சிவந்த பத்மமிருக்கின்றது. அதன்மத்தியில் கங்காளமாலையணிந்த காகினி என்னும் சக்தியிருக்கின்றது. அது மஞ்சள் வர்ணமும் நாலுபுயமும், பாசம், கபாலம், வரம் அபயமும் உடையதாயிருக்கும்; மஞ்சள் வர்ணமுள்ள வஸ்திரம் உடுத்தியிருக்கும்; சர்வாலங்கார முடையதாயிருக்கும்; அமிர்தத்தால் நனைந்த இருதயமுடையது. நடுவிலுள்ள திரிகோணத்தில் அர்த்தசந்திர பிந்துஸ்வரூப மஸ்தமுடையதும், ஒளியுள்ளதும், சொர்ண வர்ணமுடையதுமான பாணலிங்க சிவமிருக்கின்றது. அதன்மேல் சலனமற்ற தீப மொட்டுப்போன்ற வடிவமுள்ள ஹம்ஸஸ்வரூபிய சீவாத்மா விருக்கின்றது. இதன்கீழ் சிவந்த வர்ணமுள்ள ஊர்த்துவமுகமான எட்டிதழ்த்தாமரையுண்டு. அதில் கற்பகமரமும், இரத்தினமேடையும், சூரியன் சந்திரனுமாகிய இவற்றால் அலங்கரிக்கப்பட்ட மானதபூஜா ஸ்தானமிருக்கின்றது. இதையறிந்து பூஜித்துத் தியானித்து நிஷ்டைகூடும் யோகி வாயுவை ஜயிப்பான். வாயுமண்டலத்தில் யதேச்சையாய்ச் சஞ்சரிப்பான். வாயுவினால் அவனுக்குப் பயம் நேராது.

கழுத்தினடியில் அநாகதசக்கரமிருக்கின்றது. இது சிவந்த மகரந்தமுள்ள பதினாறிதழ்களுடன்கூடிய பத்மம். இதழ்களில் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ரு, ரூ, ளு, ளூ, ஏ, ஐ, ஓ, ஔ, அம், அஃ ஆகிய பதினாறு வர்ணங்களை யுடையது. எழுத்துக்களும் சிவந்தநிறமாகவே தோற்றும்




கர்ணிகையின் நடுவில் வட்டமாயும் வெண்ணிறமாயுமுள்ள ஆகாய மண்டலமிருக்கின்றது. அதன் மத்தியில் ஒரு திரிகோணமுண்டு. நடுவில் சந்திரமண்டல மிருக்கின்றது. அதன்மேல் வெள்ளைவஸ்திரமுடுத்து வெண்ணிறமுடையதாய், நான்குதோள் பாசம் அங்குசம் வரதம் அபயம் என்பவற்றைத் தரித்த ஹம் என்னும் ஆகாசபீஜ மிருக்கின்றது. அது வெள்ளையானையின் மேலிருக்கும். அதன்மத்தியில் ரிஷபம் இருக்கின்றது. அதன்மேல் மஹாசிம்மாசன மிருக்கின்றது. அதில் சதாசிவன் எழுந்தருளியிருக்கிறார். அவர் அர்த்தநாரீசுவரஸ்வரூபமாயிருப்பதால் பாதிசரீரம் தங்கவர்ணமாயும் பாதிசரீரம் பால்வண்ணமாயுமிருக்கும். அவர் ஐந்துமுகம் முக்கண்கள் பத்துக்கரங்களுடையவராயிருப்பர். பத்துக்கைகளிலும் சூலம், டங்கம், வாள், வஜ்ஜிரம், தீமணி, நாகம், அங்குசம், பாசம் இவைகளைத் தரித்திருப்பர். சர்வாங்கமும் விபூதி அணிந்திருப்பர். நாகாபரணங்களை அணிந்திருப்பர். அமுதமொழுகும் அதோ முகமான அர்த்தசந்திரனைச் சூடியிருப்பர். இதன் கர்ணிகையில் சந்திரமண்டல மத்தியில் ஸாகினியென்னும் சக்கரத்தை நடத்தும் சக்தி வசிக்கின்றது. இது நாலு புயங்களும் வெண்ணிறமுமுடையதாயிருக்கும். பாசம், அங்குசம், வில், பாணம் என்பவற்றைக் கையில் தரித்திருக்கும். பீதாம்பர மணிந்திருக்கும். ஐந்துமுகங்களும் மூன்று கண்களுமுள்ளதாயிருக்கும். இவ்வாறு இந்தச் சக்கரத்தையும் அதில் விளங்கும் சதாசிவத்தையும் சக்தியையும் தரிசித்த யோகியானவன் ஆகாயபூதத்தை ஜயித்தவனாவான். இவன் தடையின்றி ஆகாயத்தில் சஞ்சரிப்பான். இவனுக்கு அஷ்டமஹாசித்திகளும் பணிவிடைக்காரர்களைப்போல ஏவல் செய்து காத்துக்கொண்டிருக்கும். ஆயினும் அந்த யோகி அதில் மயங்கிக் கிடக்கமாட்டான். மோட்சத்திலேயே கருத்தா யிருப்பான்.

(தொடரும்.) சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

உ

சிவமயம்




(499-ம் பக்கத் தொடர்ச்சி.)

## எறிபத்தநாயனார் புராணத்தின் சில விசேடக் குறிப்புகள்.

**வாரபத்திரம்.**

"சூரியன் வில்வமே துளசி திங்களே
யாரலில் விளாவிலை யறிவன் மாதுளை
வேரிநா யுருவிபொன் வெள்ளி நாவலே
காரியாஞ் சனியினில் விஷ்ணு காந்தியே"

(ஞானப்பிரகாசர்-புட்பவிதி-15.)

### காலையிற் சாத்தும் அஷ்ட புட்பம்.

"வம்பவி ழலரிநா யுருவி மல்லிகை
வெம்பிய வெருக்குடன் வில்வம் வெண்மலர்
நம்பிய வடுக்கலர் நந்திநாண்மல
ரம்புயங் காலையி லஷ்ட புட்பமே" (ஷை-17.)

### உச்சியிற் சாத்தும் அஷ்ட புட்பம்.

"போதவிழ் பொன்னூ மத்தை புலிநகக் கொன்றை வெள்ளைப்
பாதிரி வன்னி செய்ய முளைபடர் மந்தாரை * * * *
பேதமாய் மலரும் * * * கொன்றை பெரியதும்பை
யோதிய விலைக * * * யி லஷ்ட புட்பம்" (ஷை-18.)

### அந்தி அர்த்தயாமம் அபரான்னங்களிற்சாத்தும் அஷ்டபுட்பம்.

"வந்தமல் லிகையி ரண்டு மகிழ்தரு மல்லி கைப்பூக்
கொந்துவேர் சண்ப கப்பூச் சிறியசண் பகங் கொழுந்து
சிந்தைகூ ரஷ்ட புட்பஞ் சிவன்முடிக் கேறும் போழ்தி
லந்தியோ டர்த்த யாம மபரானந் தனினு மாமே" (ஷை-19.)

### எல்லாக்காலங்களுக்குமுரிய அஷ்டபுட்பம்.

"இலகிய புன்னைவெள் ளெருக்குச் சண்பக
நிலவிய வலம்புரி நீலம் பாதிரி
யலரிசெந் தாமரை யஷ்ட புட்பமாம்
புலரியம் போதொடெப் பொழுதுஞ் சாத்தலாம்" (ஷை-20.)

### மாத புட்பம்.

"மெத்திய பலாசு புன்னை வெள்ளெருக் கலரிப் போது
கொத்தலர் சண்ப கப்பூக் கொன்றையே தும்பை செய்ய
கத்தரி பட்டி கஞ்சங் காவிமல் லிகையீ ராறும்
சித்திரை முதலாக் கொள்க சிறந்திடு மாத புட்பம்" (ஷை-21.)

### திரிகால நிர்ணயம்.

"காலை யானது தாமத காலமே
யேலு முச்சி யிராசத காலமே
மாலை நேரமும் வாழ்த்திடு நேயமுஞ்
சாலும் வைகறைக் காலமுஞ் சாத்திகம்"

(ஞானப்பிரகா-புட்பவிதி-30.)

### தமோகால மலர்.

"போது ளோதிய பொன்னிறப் பூவுடன்
சாதி நீலந் தவிர்ந்த கரியபூ
மாது கேளிவை தாமத மாமல
ரோது காலையிற் சாத்துத லுத்தமம்" (ஷை-31.)

### இராசத காலமலர்.

"செய்யதா மரை பலாசு செங்கழு நீ * * த்தை
செய்யமந் தாரை செய்ய வழுதலை * * ட்டி
செய்யபா திரியே செய்ய புலிநகக் கொன்றை யுச்சிக்
கெய்திரா சதப்பூ வாகு மெழுந்தபட் டலரிப் பூவும்" (ஷை-32.)



### சாத்விக காலமலர்.

"வெள்ளைமந் தாரை பிச்சி வலம்புரி வெண்காக் கொன்றை
வெள்ளையம் புய மெருக்கு மல்லிகை வெள்ளி லோத்தி
வெள்ளல ரியின்பூத் தாளி மிளிர்புன்னை மகிழ்செவ் வந்தி
தள்ளருந் தும்பை சாதி சாத்திக மலர்க ளாமே" (ஷை-33.)

### புட்பஞ்சாத்து முறைமை.

"முறையுறு மஷ்ட புட்ப முதலிய சாத்தும் போதி
லிறைவனுக் கொருபூ வேனு மெண்ணினிற் குறைய லாகா
நிறைவுறப் புனைதல் வேண்டு நீண்மலர் கிடையா தாகிற்
குறைவறச் சொன்ன புட்பங் கூட்டியுங் கொள்ள லாமே" (ஷை-25.)

"நறைமலர்ப் பொருட்டுநன் னுளம் போக்கியே
குறையுறக் குற்றமாங் குறைப டாவகை
நிறைவுறச் சாத்துக நீரின் போதெலாம்
புறவிதழ் போக்கினும் புனித மென்பவே"

(ஞானப்பிரகாசர்-புட்பவிதி-26.)

(தொடரும்) பஞ்சாட்சரபுரம், வாலையாநந்தம்.




## மெழுகு வர்த்தி

(தொழில் விதம்)

சாதாரண மெழுகுவர்த்தி 100°F முதல் 130°F வரையில் குறைந்த உஷ்ணமுள்ள பாரபின் (Paraffin) என்ற ஒருவித மெழுகாற் செய்யப் படுகின்றது. அவ்வர்த்திகள் வளையாதிருக்கும் வண்ணம் ஸ்டீரிக் (Stearic) என்ற திராவகம் அம்மெழுகுடன் நூற்றுக்கு ஐந்து அல்லது பத்துவீதம் சேர்க்கப்படும். ஓசோகிரைட் (Ozokerite) என்ற ரசாயனப் பொருளி லிருந்து எடுக்கப்படும் 140°F முதல் 170°F வரை உஷ்ணமுள்ள கெரிசின் (Kerosene) என்ற மற்றொருவித மெழுகினால் உயர்தரமான வர்த்திகள் செய்யப்படும். அதிலுமுயர்ந்த வர்த்திகள் ஸ்பெர்மாசிடி (Spermacite) என்ற பதார்த்தத்தினா லாக்கப்படும். இவ்வர்த்திகளுக்கென்று விசேஷமாக, சுத்தமான பருத்தியைக்கொண்டு திரிகள் தயாரிக்கப்படுகின்றன. திரிகள் நூற்கப்பட்டவுடன் அவை ஒரு பங்கு போரிக் (Boric) திராவகமும் நூறு பாகம் தண்ணீரும் கலக்கப்பட்ட பாத்திரத்தில் ஊறப்போடப்பட்டு, நன்றாக ஊறியபின் நீராவியின் சூட்டால் காய்ந்த ஓர் பெட்டியிலிட்டுக் காயவைக்கப்

படுகின்றன. இவ்விதம் காய்ந்த திரியைத் தொழிலாளர் நூல் சுற்றும் கம்பியில் சுற்றிவைக்கின்றார்கள். பல்லுருக்கொண்ட உலோகத்தாலான மெழுகுவர்த்தி செய்யப்படும் இயந்திரம் நீரிலழுந்தியிருக்கும். அப் பல வுருவான உறுப்பினுக்கடியில் சமமாகவும் ஒரே மாதிரியாகவும், ஏககாலத்தில் வேலை செய்யக்கூடியவைகளாகவுமுள்ள குழாய்கள் பல அமைந்திருக்கின்றன. அச்சிறு குழாய்கள் இஷ்டம்போல் ஏகோபிதமாக வேலை செய்யக் கைப்பிடியொன்று வெளியில் பொருத்தப்பட்டிருக்கிறது. அக்குழாய்கள் துவாரமுள்ளனவாயிருக்கின்றன. அத்துவாரங்களுக்கு நேராக மேற்கூறிய திரிகள் சுற்றப்பட்ட கதிர்களமைந்திருக்கின்றன; இயந்திரத்தின் சக்கரங்கள் சுற்றுவதால், அக்குழாய்களின் நடுவில் திரிகள் சரியாக வந்து நிற்கின்றன. வர்த்திகள் செய்யப்படும் நெகிழ்ந்த மெழுகடங்கிய பெட்டியொன்று அவ்வியந்திரம் ஆழ்ந்திருக்கும் நீர்மட்டத்திலமைக்கப்பட்டுளது. T போன்ற உருவுள்ள வேறொரு குழாய் இயந்திரம் வேலைசெய்யும் பொழுது தேவைக்குத்தக்கவாறு குளிர்ந்த ஜலத்தையும், சூடான நீரையும் தனித்தனியே அளிக்கின்றது. அதிகப்பட்ட தண்ணீர் வெளியே செல்லுமாறு மற்றொரு குழாயும் அவ்வியந்திரத்தில் காணப்படும். மற்றும், மெழுகுவர்த்தி செய்யுமந்த இயந்திரத்தில் நெருங்கிய இடுக்குகள் விடப்பட்ட பத்திருப்புகள் பல நிறைந்திருக்கின்றன. இயந்திரத்தின் வெளிப்பாகத்திலமைத்திருக்கும் கைப்பிடி (சாவிபோன்றது) யினுதவியால் அப்பத்திருப்புத்திறப்புகளை ஒரேசமயத்தில் திறந்துவிடலாம். மெழுகு, பதமாக உருக்கப்பட்டுக் கெட்டில்போன்ற அமைப்புள்ள குழாயின் வாயிலாக, அடுத்தடுத்தமைந்துள்ள அறைகளின் வழியாகச் சிறு குழாய்களை அடைகின்றது. மெழுகு குழாய்களைக் கடந்து செல்லுஞ்சமயத்தில் அறையிலுள்ள தண்ணீர் மிதமான சூடாயிருக்கின்றது.

மெழுகு, குழாய்களை அடைந்த பின்னர்க் குளிர்ச்சிப்படுத்தப்பட்டு இறுக, மேலே குறிப்பிட்ட T போன்ற குழாயின் மற்றொரு துவாரத்தின் வாயிலாகக் குளிர்ந்த நீர் வருகின்றது. பிறகு மெழுகு உரப்படுகின்றது. குழாய்கள் ஏகோபிதமாகக் கைப்பிடியினுதவியால் தூக்கப்பட்டு, அவ்வியந்திரத்திலேயே பொருத்தப்பட்டருக்கும் கத்தியால் சமனளவுள்ளதாக வெட்டப்படும். தொழிலாளர் எஞ்சிய மெழுகைத் திரட்டித் தனியாக எடுத்து விடுகின்றனர். பின்பு, அப்பத்திருப்புக் கம்பிகள் உயர்த்தப்பட்டு அக் குழாய்களின் அடிப்பாகத்தில் ஒரேமாதிரியாக நுழைந்து நிற்க, மெழுகுவர்த்திகள் குழாய்களுக்கு வெளியிற் சிறிது தள்ளப்பட்டு நீண்டு நிற்கின்றன. இதன் பின்னர் மெழுகு மறுமுறை முன் கூறியபடி காய்ச்சப்பட்டு அக்குழாய்களில் வார்க்கப்படுகின்றது. பிறகு முதல் மெழுகுவர்த்திகள் வெளியிலெடுக்கப்படுகின்றன. ஸ்டீரிக் (Stearic acid) திராவகம், பால்மிடிக் (Palmitic) என்ற கொழுப்பு சம்பந்தமான திராவகம் ஆகியவற்றைக் கொண்டு தொழிலாளிகள் மெழுகுவர்த்திகளை ஆக்குகின்றனர். மெழுகு தகடு தகடாக உதிராவண்ணம் ஒன்று சேர்ந்திருக்க நூற்றுக்கு ஐந்துவீதம் 'ஸ்டீரிக் ஆசிடை' 'பால்மிடிக் ஆசிட்' டுடன கலக்கவேண்டும். இவ்விதம் மெழுகுவர்த்திகள் செய்யப்படும்.



### ஜரிகை சுத்தஞ் செய்யும் விதம்.

தங்க ஜரிகையைச் சுத்தப்படுத்த அதை மிருதுவான தறியிட்ட ஜமுக்காளத்தின் மீது கிடத்தி, தூரிகை (Brush) கொண்டு அழுக்குப் போக நன்றாகத் துடைக்கவேண்டும். பின்னர்க் கல்லுப்பை (Rock Alum) எரித்து நன்றாகப் பொடிசெய்து, சல்லடைகொண்டு சலித்து, அதன்மேற் போட்டு மற்றொரு மிருதுவான தூரிகை கொண்டு ஜரிகையைத் துடைக்கவேண்டும். இவ்வாறு செய்தால் நூலினின்றும் பிரியாமல் ஒட்டிக்கொண்டிருக்கிற ஜரிகை புதிய பளபளப்புடன் தோன்றிச் சுத்தமாம். (இம்முறை வஸ்திரங்களிலுள்ள சரிகையைப் புதுப்பிக்கச் சாலச்சிறந்ததாம்.)

### உருளைக்கிழங்கு கெடாதிருக்கும் விதம்.

நன்றாகக் காய்ச்சப்பட்ட தண்ணீருள்ள பாத்திரத்தில் உருளைக்கிழங்கை ஓர் மூடியுள்ள கூடையிலிட்டு இரண்டு நிமிஷநேரம் வரையில் முழுக வைத்து எடுத்துவிடவேண்டும். அப்பொழுது கிழங்கு சிறிது வெப்பப்படுகின்றது. அவற்றைச் சாக்குகளிலிட்டுச் சற்று ஈரமான இடத்தில் வைத்திருந்தால் அவை பல மாதங்கள் வரை கெடாமலிருக்கும்.

ஸ்ரீதான், திரிசிரபுரம்.




## வேதாந்த சாரசங்கிரக வசனம்

(521-ம் பக்கத் தொடர்ச்சி.)

**நிச்சலத்தன்மை (அ) உறுதி:**—குருவாக்கியங்களினாலும் வேதாந்த வசனங்களினாலும் நிச்சயிக்கப்பட்ட பொருளெதுவோ அப்பொருளினிடத்தே நிச்சய புத்தி கொண்டு உறுதியாய் அதன் வழி நிற்றல்.

**அபிமான மின்மை:**—கல்வி செல்வம் தவம் அழகு குணம் குலம் ஆஸ்ரமம் முதலானவைகளால் உண்டான நான் பண்டிதன், நான் பணக்காரன், நான் தவசி, நான் அழகுள்ளவன், நான் பிராம்மணன், நான் யதி என்பவையாதிய அகங்காரங்களை விடுதல்.

**ஈசுவரதியானம்:**—மனம் வாக்கு காயமென்னும் திரிகரணங்களாலும் விஷய சம்பந்தமான சகலகாரியங்களையும் அறவே விட்டுத் தன் ஆத்மாவையே சிந்தித்தல் எதுவோ அது ஈசுவர தியானமாம்.

**ஞானிகளின் கூட்டுறவு:**—பிரம்மவித்துக்களை எப்பொழுதும் விட்டுப் பிரியாமல் நிழல்போல் கூடியிருத்தல்.

**ஞான நிஷ்டை:**—கர்மங்களைச் செய்வதில் சிறிதும் விருப்பமில்லாமல் ஞான சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட சிரவணம் முதலான சாதனங்களினிடத்து விருப்பங்கொண்டிருத்தல் ஞான நிஷ்டை யாகும்.

**சமபுத்தி:**—செல்வம் முதலானவை வந்த காலத்தில் இன்பமுற்றுச் சந்தோஷப்படாமலும் ஜுரம் முதலான துன்பம் நேர்ந்தபோது துக்கப்படாமலும் இன்ப துன்பங்களைச் சமமாகப் பாவித்தல் சமபுத்தியாம்.

**கௌரவம் விரும்பாமை:**—உலகத்தில் ஜனங்கள் என்னை உத்தமனென்றும் பூசிக்கத் தக்கவனென்று மறிந்து பூசிக்கவேண்டுமென்னும் விருப்பம் இல்லாதிருத்தல்.

**ஏகாந்த வாசம்:**—சத்விசாரத்திற்கு சனக்கூட்டம் தடையாமென்றெண்ணித் தனியாக இருத்தல் ஏகாந்த வாசமாம்.

**மோக்ஷ வாஞ்சை:**—எனக்கு சம்சாரபந்த விடுதலை விரைவில் எப்பொழுது வாய்க்குமோ என மிகவும் திடபுத்தி கொண்டிருத்தலெதுவோ அது மோக்ஷ வாஞ்சை எனப்படும்.

(சாதன சதுஷ்டயத்தி (நான்கி)ல் மூன்றுவதாகிய சமாதிஷட்க சம்பத்தி ஆறனுள் இரண்டாவதாகிய தமம் கூறப்படுகின்றது.)

(2) **தமம்:**—புத்தியினிடத்திலுள்ள தோஷங்களை நிவர்த்திப்பதற்காக பிரம்மசரியம் முதலான தர்மங்களினால் புத்தியைத் தண்டித்தலே தமமெனப்படும். இது மனோசாந்திக்குக் காரணமாகின்றது. (மனதை விஷயங்களில் செல்லவிடாமல் தடுத்தல் சமமென்றும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும் ஊறு-சுவை-ஒளி, நாற்றம், ஓசை (பரிசம்-ரசம்-ரூபம்-கந்தம்-சத்தம்) என்னும் தத்தம் விஷயங்களிற் செல்லவிடாது தடுத்தல் இங்குக் கூறிய தமமென்றும் அறிக. 'சமம் அகக்காரணதண்டம் தமம் புறக்காரணதண்டம்' என்பது கைவல்லியம். தேகத்தினுள்ளிருந்து விஷயங்களை யறிதற்குச் சாதனமாயிருப்பது அந்தக்கரண மெனப்படும். அது விருத்தி (தொழில் செய்யும்) பேதத்தால் நான்குவகையாம். அவை மனம் புத்தி சித்தம் அகங்காரம். இவற்றுள்,

மனம்—சங்கற்பத்தை (நினைத்தலை)ச் செய்வது.
புத்தி—பதார்த்தங்களின் நன்மை தீமைகளை நிச்சயிப்பது.
சித்தம்—சிந்தித்தலைச் செய்வது.
அகங்காரம்—நான் என்று அபிமானித்தல்.

இவ்விஷயங்கள் பின்னால் கூறப்படுமேனும் அவசியம் நோக்கி ஈண்டுச் சுருக்கக் கூறப்பட்டன.

இந்திரியங்களைத் தடுத்தல் தமமென்று கூறாமல் புத்தியைத் தண்டித்தல் தமமென்று மேல் கூறியது ஏனெனில்: முற்கூறிய பிரம்மசரியம் முதலானவைகளால் புத்தியினிடத்துள்ள குற்றங்களைப் போக்குதல் வாயிலாக இந்திரியங்களைத் தடுத்தல் சாத்தியமாகும் என்பதை யுணர்த்தற்கேயாம் என்க. (மேல் இந்திரியங்களைக் குறிப்பிடுவதும் காண்க.)



இந்திரியங்கள் சுயேச்சையாய் விஷயங்களிற் பிரவர்த்திக்கும்போது காற்றின்வழிச் செல்லும் நெருப்பைப்போல, அந்த இந்திரியங்களை அனுசரித்து மனமும் ஓடுகின்றது. இந்திரியங்கள் தடுக்கப்படுமானால் மனமும் தன் வேகத்தைவிட்டு யோக்கியத்தன்மை யடைகின்றது; அதனால் மனம் பரிசுத்த மடைகின்றது; அப்படி நிர்மலத்தன்மையடைவதால் மனிதனுக்கு மோக்ஷம் சித்திக்கின்றது. வேறுவிதத்தால் சித்திப்பதில்லை. ஆகையால் எல்லா இந்திரியங்களையும் விஷயங்களிற் செல்லவொட்டாமல் தடுப்பதே மனோசுத்தத்திற்கு மூலமாகும். அவ்வாறு இந்திரியங்களைச் செவ்வையாய் அடக்குவதனால் மனதில் விஷயங்களை அனுபவிக்க வேண்டுமென்னும் எண்ணம் உண்டாகாது. விஷயபோகத்தைவிடுவதால் மனமானது தன்கெட்ட சுபாவத்தைவிட்டு மெல்ல மெல்ல உபசாந்தியை (ஓடாமல் அடங்கியிருத்தலை) யடைகின்றது. இவ்வாறு மனம் வெளிவியாபாரங்களை விட்டு அடங்கப்பெறுவதையே மோக்ஷ (பந்தநிவிர்த்தி ஆனந்தப்பிராப்திவடிவ) மென்று மோக்ஷத்தின் தன்மையை யறிந்த பெரியோர் கூறுவர்.

ஆதலால் முக்தியையடைய விரும்புவோருக்குத் தமத்தைவிட நன்றாய்ச் சுலபமான மனோநிர்மலத்திற்குரிய மார்க்கம் வேறில்லை. தமத்தினால் மனம் தன் குற்றங்களைவிடுத்துச் சாந்தியை விரைவில் அடைகின்றது. தேசகால பாத்திரங்களை யனுசரித்துச் செய்யப்பட்ட பிராணாயாமத்தினால் நிச்சலத்தன்மையும் நிர்மலத்தன்மையும் நல்ல ஞானமும் உண்டாகும்; அவை, எப்பொழுதும் அழியா. ஆகையால் புத்திவானாயுள்ளவன் சித்தசாந்தியின் பொருட்டு பிரயத்தின பூர்வகமாய்த் தமத்தைச் செய்யவேண்டும்.

(மூக்கின் இடது துவாரத்தின் வழியாய் இடையென்னும் நாடியால் பிராணவாயுவை உள்ளுக்கிழுத்து சுழுமுனையால் அக்காற்றை யடக்கி மூக்கின் வலது துவாரவழியால் அக்காற்றை விடுதலாகிய பூரககும்பகரேசகங்களுக்குப் பிராணாயாமமென்று பெயர். இது அஷ்டாங்க யோகங்களிலொன்று. மனம் விஷயங்களில் செல்லாமல் தடுக்கப்படுதற்கு இதுவும் ஓர் வழியாகும். ஆயினும் இது மிக்க கஷ்டசாத்தியமானது. எல்லோராலும் செய்யக்கூடியதல்ல.

(ஆனால் இங்குக் கூறப்பட்ட பிராணாயாமமென்பது இதுவல்ல. மேல் இவ்வாசிரியரே பிராணாயாமலக்ஷணங் கூறுமிடத்து 'எல்லாவிதமான மனோ வியாபாரங்களையும் தடுத்தலே பிராணாயாமமாம்' எனக் கூறியிருத்தலின் இங்கும் அதுவே கொள்ளத்தக்கது. ஆகையால் பிராணாயாமவடிவதமத்தால் எனப் பொருள் கொள்ளப்படும்.) எல்லா [illegible] ாரங்களையும் தடுப்பதனாலும் அனுபவயோக்கியமான [illegible] குண தோஷங்களை (நன்மை தீமைகளை) வி[illegible]னாலும், பரமேச[illegible]ய

18748

அனுக்கிரகத்தாலும், குருவின் கிருபையாலும் *மனமானது விரைவில் சாந்தியை யடைகின்றது.

(தோஷ திருஷ்டியாகிய அங்குசத்தால் மனதாகிய யானையைச் சுவாதீனப் படுத்துவது சமம். தோஷ திருஷ்டி பூர்வகமாய்ச் சாஸ்திரசிந்தனையாகிய சாட்டையால் சப்தாதி விஷய வடிவமார்க்கத்தில் போகும் இந்திரியங்களாகிய குதிரைகளைச் சுவாதீனஞ் செய்தல் தமம் என்னும் விசார சாகரக் குறிப்புரை ஈண்டறியத்தக்கது.)

(3) திதிக்ஷை:—இது சகித்தலெனவும் படும். பிராரப்தத்தின் வேகத்தால் நேரிடும் ஆத்யாத்மிகம் முதலான துக்கங்களைச் சிந்திக்காமல் சகித்தல் திதிக்ஷையாம். மோக்ஷத்தைக் கோருமவனுக்கு இந்தத் திதிக்ஷைக்குச் சமானமான சாதனம் வேறில்லை. தைரியசாலிகள் இதையே கவசமாகத் தரித்துக்கொண்டு (தங்கள் காரியசித்திக்குத் தடையாக உண்டாகும்) எல்லா இடையூறுகளையும் நாசமாக்கி மாயையை ஜெயிக்கின்றார்கள். இக்கவசம் வச்சிராயுதத்தாலும் சேதிக்கப்படாது. அஷ்டாங்க யோக சித்திகளும் சுவர்க்காதிபத்தியம் முதலானவைகளா லுண்டாகும் சுகானுபவ சித்தியும் சகிப்புத் தன்மை யுடையோர்க்கே யுண்டாம். அஃதில்லாதவர்கள் மரத்திலிருக்கும் சருகானது காற்றால் உதிர்ந்து விடுவதுபோல் நேரிடும் தடைகளால் எடுத்த காரியத்தைச் சாதிக்கமுடியாமல் விழுந்துபோவார்கள். தவம், தானம், யாகம், தீர்த்தம், விரதம், சாஸ்திரம், ஐசுவரியம், மோக்ஷம் ஆகிய யாவும் சகிப்புடையவர்களாலேயே தான் அடையப்படும். பிரம்மசரியம், அஹிம்சை, சாதுபூஜை, பரநிந்தனையைப் பொறுத்தல் என்னும் இவை திதிக்ஷையுடையார்க்கே சித்திக்கும். தேவதைகளாலும் மனிதர்களாலும் நேரிடும் எல்லாத் தடைகளும் சகித்தலையுடையோரிடம் சேரா. விக்கினங்களுக்குப் பயந்து பின்வாங்காதவனுக்கு எல்லாச்சித்திகளும் அணிமாதி அஷ்ட ஐசுவரியங்களும் கைகூடும். ஆகையால் மோக்ஷத்தை விரும்புகிறவன் காரியசித்தியின் பொருட்டு அதிகமான சகிப்பைச் சம்பாதிக்க வேண்டும்.

தீவிரமான மோக்ஷாபேக்ஷையும் மிகுந்த ஆசையின்மையும் ஆகிய இவ்விரண்டும் திதிக்ஷைக்குத் துணைக் காரணங்களாம். (சகிப்புத் தன்மையுண்டாதற்குத் துணைக் காரணங்களாம்.)

“மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்”

(என்ற செய்யுளும் ஈண்டு அறியத்தக்கதாம்.)

(சிரவணம் மனனம் முதலியவைகளைச் செய்யுங்காலத்தில் அவைகளுக்கு விரோதமான சீதோஷ்ணம் பசிதாகம் முலியவைகளைச் சகித்தல் திதிக்ஷை. இஃது இல்லாவிடின் சிரவணாதி காலங்களில் பசிதாகம் முதலியவைகள் சம்பவிக்கும். அப்போது அவற்றை நிவிர்த்திக்க மனது பிரவர்த்திக்கும். அதனால் சிரவணாதிகளுக்கு விக்கின முண்டாகும். ஆதலால் திதிக்ஷை (சகித்தல்) அவசியம் வேண்டும் என்பது விசாரசாகரம்.

இவ்வாறின்றி அப்பொழுதைக்கப்பொழுது உண்டாகும் வியாதிகளின் நிவர்த்திக்காக முயற்சித்திக் கொண்டிருப்பனேல் அவற்றைப்போக்க ஔஷ



தங்களைப் புசிக்கவும் அவற்றை விசாரித்துக்கொண்டும் தேடிக்கொண்டுமிருக்கவும் நேரிடும். அதனால் சிரவண மனனாதிகளை விடவேண்டிவரும். எதியாயுள்ளவனொருவன் இவ்வாறு விடுவானானால் அவன் கதியாதாம்! இரண்டு விதத்திலும் பயனடையாமல் இரண்டுங் கெட்டவனாவானன்றோ.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் அஷ்டாங்கயோகங்களை அப்பியசிக்கும் சன்னியாசியைக் குறித்துக் கூறுமிடத்து யோகத்தினின்று இடையில் தவறிவிட்டவன் இறந்தபின் புண்ணியவான்களினுலகத்தை யடைந்து மீண்டும் பரிசுத்தவான்களுடைய வீட்டிலாயினும் பிரபுக்களின் வீட்டிலாயினும் பிறந்து யோகசித்தியை யடைவான். கர்மங்களை விடாமல் செய்துகொண்டிருப்பவனும் அக் கர்மபலத்தைக் கோராமல் செய்வானாயின் அவனும் புண்ணியவான்களி னுலகத்தையே யடைவான் எனக் கூறியிருத்தலின் சிரவண மனனாதிகளைவிடும் சன்னியாசியின் நிலைமை என்னவாகுமென்பது விளங்கும். மேலும், சன்னியாசத்தை மேற்கொண்டதனாலேயே அதாவது சகலகர்மங்களையும் செய்யாமல் விடுதல் மாத்திரத்தாலே ஒருவன் மோக்ஷத்தை யடையமாட்டான் என்றும் பகவான் கூறியுள்ளார்.

ஆகையால் தனக்கு நேரிடும் துக்கங்களைப் பொறுமையாகச் சகித்துச் சக்திக்கேற்றபடி மெல்லமெல்ல சிரவணம் மனனம் முதலானவைகளைச் செய்யவேண்டும். அங்ஙனம் சகிக்காவிடின் அதுவரை முயற்சிசெய்து சாதிக்கப்பட்ட திதிக்ஷைக்குப் பயனுண்டாகாமற் போகும்.

(தொடரும்.) பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

---

## மானிடர் ஜன்ம—கர்த்தவ்யம்.

ஜனகர் சுகர் முதலிய மகான்கள் அரைநிமிஷமும் ப்ரம்ம வ்ருத்தியின்றி இருந்ததில்லையென்று சாஸ்திரம் கூறுகிறது. நாமும் அப்படியே நமது சக்திக்குத் தக்கபடி மேன்மேலும் ப்ரம்மாப்பியாஸம் செய்யவேண்டுமென்பதும், ப்ரம்ம வ்ருத்தியின்றி அரைநிமிஷம் கழிப்பினும் அம்மட்டில் காலம் வீணே கழிக்கப்பட்டதென்பதும் மேற்படி கூற்றிலிருந்து ஏற்படுகின்றன.

காரணமும் வெளிப்படையே. ஸமஸ்தப்ரபஞ்சமும் அவித்யா விலாஸமென்பதும் அத்வைத ப்ரம்மவஸ்துவே ஸத்யமென்பதுமன்றோ வேதத்தின் கோஷம்! ப்ரம்ம ஞானந்தான் ஞானம். ப்ரம்ம வித்தைதான் வித்தை. ‘வித்தைக்குள் அத்யாத்ம வித்தை நான்’ என்று கீதையில் பகவான் கூறவில்லையா? ஆத்ம மாத்ரமாயுள்ள ப்ரம்மஸாக்ஷாத்காரம்தான் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியால் குறிக்கப்பட்டுள்ள ஸர்வாதீத மோன ஸ்திதியாகிய கைவல்யம். ஆதலால் ஸத்குருவை அடைந்து நம் ஸ்வரூப அஞ்ஞானத்தை நிவர்த்தித்துக் கொண்டு ஸதா ஸ்வரூபானு சந்தானம் செய்தலாகிய ப்ரம்மாப்யாஸம் செய்து ஈற்றில் ப்ராம்மீ ஸ்திதியை அடைவதே நாம் பகுத்தறிவுள்ள மானிட ஜன்மம் எடுத்ததன் பலனாக இருக்கவேண்டுமேயன்றி மற்ற எக்காரியமும் கானல் ஜலத்தை நாடிச்சென்ற கதையாகும்.

இம்மாதிரி ஆத்ம விசாரம் செய்து ஆத்மஞானவாயிலாக பவபந்த நிவர்த்தியாகிய மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடைவது, ஆகார நித்ராபய மைதுனாதிகளைக்காட்டிலும் விசேஷமாக ஞானத்தை யுடைத்தாய மானிட ஜன்மாவிற்கே ஸாத்யமானதுபற்றி, நரஜன்மம் கிடைப்பதே அரிதென்றும் புண்ணியவசத்தால் கிடைத்த அந்த ஜன்மாவை ப்ரம்மவஸ்துவில் ஈடுபடச்செய்யாமல்

வீணாக்குவதைவிட அறியாமை மற்றொன்றில்லையென்றும் பெரியோர் கூறியிருக்கின்றனர். மானிடஜன்மத்திலும் புருஷஜன்மம் மேலென்றும் அதிலும் தருமப்படி நடப்பது மேலென்றும் அதிலும் வித்வானாயிருப்பது மேலென்றும் அதிலும் ஆத்மானாத்ம விவேகம் பெறுவதுமேலென்றும் அதிலும் ப்ரம்மானுபவம் மேலென்றும் அதிலும் ப்ரம்மமாகவே யிருப்பது மேலென்றும் ஸோபானங்கள்போல் ஒன்றுக்கொன்று மேலானதாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மானிடப்பிறவியின் இத்தகைய மேன்மையை யுன்னியே யன்றோ ஒளவை 'அரிது அரிது மானிடராதலரிது' என்றும், தாயுமானவர் 'எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான் யாதினு மரிதரிதுகாண்' எனவும் அறைந்திருக்கின்றார்கள்!

இவ்வளவு அரிதான மானிட ஜன்மாவின் காலம் எவ்வளவென்று பார்க்கப்புகின் மிக அல்பமே. அந்த அல்பகாலத்திலும் நித்திரையிற் பாதி போகின்றதென்றும், மற்றப் பாதியிற்பாதி பாலியத்திலும் வார்த்திகத்திலும் போகின்றதென்றும், மீதியானது வியாதி, பிரிவு, துக்கம், சேவை முதலியவைகளிற் செலவழிக்கப்படுகின்றதென்றும், ஜீவன் அலையைப்போல் சஞ்சலமாயிருக்கையில் பிராணிகளுக்கு சௌக்யமேதென்றும் ஆன்றோர் கூறியிருக்கின்றனர். ஆதி சங்கராசார்ய ஸ்வாமிகளும் 'பஜகோவிந்தம்' என்னும் கிரந்தத்தில், 'ஒருவன் பாலனாயிருக்கும்போது விளையாட்டில் ஆசையுள்ளவனா யிருக்கின்றான்; யுவாவாயிருக்கும்பொழுது ஸ்திரீகளிடத்தில் ஆசைகொண்டவனா யிருக்கிறான்; கிழவனாக இருக்கும்பொழுது கவலையுடையவனாக இருக்கிறான்; ஸர்வோத்தமமான பரப்ரம்மத்தினிடத்தில் ஒருவனும் ஆஸக்தியுள்ளவனல்ல' என்றும், அதே கிரந்தத்தில் அவர் 'பொருள், ஜனம், யௌவனம் ஆகிய இவைகளால் அகங்காரமடையாதே. காலம் எல்லாவற்றையும் நிமிஷத்தில் அபகரிக்கின்றது. மாயாசக்தியால் செய்யப்பட்ட இந்த ப்ரபஞ்சத்தைவிட்டு பரமாத்மஸ்வரூபத்தை விசாரித்தறிந்துகொண்டு அப்பரமாத்மஸ்வரூபத்தை யடைவாயாக' என்றும் போதித்திருக்கின்றனர். 'ஆசையாலும், கர்மாவினாலும், பலவித எண்ணங்களாலும் கட்டப்பட்டவனாய் நரன் தன் ஆயுள் க்ஷீணிப்பதை அறிவதில்லை' யென்று பிறிதோரிடத்திற் பகரப்பட்டிருக்கிறது.

சாஸ்திரங்களாலும் மகான்களாலும் இவ்வாறு பலவிதமாக எச்சரிக்கப்பட்டும் நாம் அரிதான நம் ஜன்மாவை வீணாக்கிக்கொண்டால் அதனினும் மதி கேடுளதோ?

ஆதலால் மானிட ஜன்மம் அடையப்பெற்ற பாக்கியவான்கள் எல்லோரும், அடுத்த க்ஷணத்தில் ஜீவித்திருப்போமென்பதற்கு ப்ரமாணமின்றியதும் புன்னுனிமேல் நீர்போன்றதுமாகிய இவ்வாழ்வைச் சதமென்றெண்ணி 'ஆத்மவிசாரம் பின்னால் செய்துகொள்வோ' மென்று காலத்தைத் தள்ளிப்போடாமல், அரைநிமிஷமும் வீணாக்காமல், பக்குவஞானிகளின் உத்தம லக்ஷணங்களாகிய சாந்தம், திதிக்ஷை, ஆசையின்மை, ஸமசித்தம், இந்திரிய நிக்ரஹம், ஸர்வாத்மபாவனை முதலியவைகளை அனுபவத்தில் மெள்ள மெள்ளக் கைப்பற்றி, ஸத்குரு அனுக்ரஹித்தபடி ஆத்மானுசந்தானத்தை இடைவிடாதியற்றி ஈற்றில் (ஒரு ஜன்மத்திலேனு மாகுக அல்லது பல ஜன்மத்தினிறுதியிற்றானாகுக) மோக்ஷத்தை அடைவதே பரம முக்யமான கர்த்தவ்யம்.

ஸர்வலோக குருவாகிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி அவ்வாறாக அருள் புரிவாராக!

ஓம் தத் ஸத்.

அ. நாராயணஸ்வாமி, B. A., B. L., ஈரோடு.



## மாணவர்பகுதி

### ஆத்திசூடி உதாரணக் கதைகள்.

(460-ம் பக்கத்தொடர்ச்சி.)

#### " கீழ்மை யகற்று "

"கீழ்மை—தாழ்ந்த குணத்தை, அகற்று—(மனிதனே! நீ) நீக்கு" என்பது இதன் பொருள்.

பொய், பேராசை, திருட்டு, வஞ்சம் முதலியவை மனிதர்க்குத் தாழ்ந்த குணங்களாம்; இக்குணங்களைக் கொண்டிருப்பவர்க்கு உலகத்தில் எவ்வித நன்மையும் ஏற்படாது; இவற்றை நீக்கிச் சத்தியம், கபடின்மை, பரோபகாரம் முதலிய நற்குணங்களைக் கொள்வோர்க்கே மேன்மையுண்டு. தாழ்ந்தகுணங்களைக் கொண்டிருந்தவர் இழிவடைந்த கதைகள் பலவுண்டு; அவற்றுள் அடியில் வரும் கதை ஒன்றாகும்:

ஒரு நகரத்தில், குமரன், மாடன் என்னும் இரண்டு வாலிபர்கள் தெருவில் போய்க்கொண்டிருந்தார்கள். அங்கே வயிரமோதிரமொன்று கிடந்தது. அதைக் குமரன் பார்த்து, "எனக்கு நல்லகாலம்; மோதிரமொன்று கிடைத்தது" என்று எடுத்துக்கொண்டான். மாடன் மிகுந்த பேராசைக்காரன்; மிகுந்த பொய்யன்; அவன் தனக்கு அம்மோதிரங் கிடைக்கவில்லை யென்று குமரன்மீது பொறாமை கொண்டான்; அதை எந்த உபாயத்தால் அவனிடமிருந்து கைப்பற்றலாமென்று ஆலோசித்தான். உடனே, "இந்த மோதிரம் என்னுடையது; நான் முன்னே இவ்வழியாகப் போனபோது இது, என்னிடமிருந்து நழுவி விழுந்து விட்டது; ஆதலால் இதை என்னிடம் கொடுத்துவிடு" என்று குமரனிடம் பொய்கூறினான். அவன் பேச்சில் குமரனுக்கு நம்பிக்கையில்லை. அதனால் அவன், மாடனை நோக்கி, "நீ பொய்கூறுகிறாய்; நான் கண்டெடுத்த மோதிரத்தைக் கொடுக்கமாட்டேன்; இது கடவுளால் எனக்குக் கொடுக்கப்பட்டது" என்று சொன்னான். மாடன், "மோதிரத்தை நீ கொண்டுபோக நான் விடமாட்டேன்" என்று குமரனோடு வம்பிழுத்தான். இருவருக்கும் சண்டையுண்டாயிற்று; மனிதர்கள் கூட்டங்கூடி விட்டார்கள்; இருவருடைய வழக்கையும் விசாரித்தார்கள். அவ்விருவரும், "மோதிரம் எனக்குச் சொந்தம் எனக்குச் சொந்தம்" என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய வழக்குத் தீரா வழக்காயிருந்தது. அதனால் அங்குக் கூடியிருந்தவர்கள், "இவ்வழக்கு நம்மால் தீர்க்கமுடியாததாயிருக்கிறது" என்று அவர்களை இழுத்துக்கொண்டுபோய் நியாயாதிபதிமுன் நிறுத்தினார்கள்.

நீதி அதிபர் அவ்வழக்கை விசாரித்தார். குமரன், "மோதிரத்தை நான் கண்டெடுத்தேன்; ஆதலால் அது எனக்குச் சொந்தமானது' என்றான். மாடன், "மோதிரம் என்னுடையதே; அது கைதவறிவிட்டது; இவன் அதை எடுத்துக்கொண்டான்; ஆதலால் அது எனக்குச் சேரவேண்டும்; நான் அரும் பாடுபட்டுச் சம்பாதித்தது; இவன் என்னை ஏமாற்றப்பார்க்கிறான்; நான் மோதிரத்தை விடமாட்டேன்" என்றான். நீதிபதி அந்த மோதிரத்தைக் காட்டும்படி குமரனிடம் கூறினர். அவன் உடனே அம்மோதிரத்தை அவர் முன் வைத்தான். நீதி அதிபர் அதைக் கையிலெடுத்துப் பார்த்ததும் மாடனை நோக்கிச் சிரித்தார். ஏனெனில், அது அந்த நீதிபதியின் மோதிரமே; முதல் நாளில் அவர் கையிலிருந்து நழுவிவிட்டது. அவர் அதைத்தேடிப்பார்த்தார். அஃதகப்படவில்லை. அதனால் அவர் பேசாமலிருந்து விட்டார். இப்போது அதைப்பார்த்து அது தம்முடைய மோதிரமென்றும், மாடன் கூறுவது பொய் யென்றும், குமரன் கூறுவது மெய்யென்றும் தெரிந்து கொண்டார். அதன் மேல் அவர், அது தம்முடைய மோதிர மென்பதை எல்லோருக்கும் கூறி மெய் கூறிய குமரனுக்குப் பத்து ரூபாய் இனும் கொடுத்தார். பொய் கூறி அதை அபகரிக்க நினைத்த மாடன் பத்து ரூபாய் தண்டம் கொடுக்கும்படி தீர்ப்புச் செய்தார். பின்னர், எல்லோரும் குமரனைச் சத்தியவந்தனென்று புகழ்ந்தார்கள்; மாடனைப் பொய்யும் மோசமும் நிறைந்த புல்லன் என்று நிந்தித்தார்கள்.

செம்பூர். வீ. ஆறுமுகஞ் சேர்வை.




## மாதரும் குடும்பமும்.

(465-ம் பக்கத் தொடர்ச்சி.)

இல்லறத்திற் குரிய முற்கூறிய முக்கிய தருமங்களெல்லாம் மாதர் கையில் தான் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. சுற்றந்தழுவல், விருந்தோம்பல், தெய்வம் வணங்குதல் முதலாகிய எல்லாக் காரியங்களும் மாதர் தம் கடமையேயாம். அவை புருஷராலாகக்கூடியவையல்ல. புருஷரின் கடமை யின்னதென முன்னம் சொன்னோம். வீட்டிற்குரிய காரியங்களுக்குப் பெண்களும் வெளிவிவகாரங்களுக்குப் புருஷர்களும் தகுந்தவர்களென்றும் சொன்னோம். புருஷர் சில சமயங்களில் நாள் முழுவதும் வெளியிலேயே யிருக்கநேரும்; நாள் கணக்காயும் வாரக் கணக்காயும் மாதக் கணக்காகவும் சில காலங்களில் வெளியில் தங்கியிருக்க வேண்டியவராவர். ஆகையால் வீட்டின் காரியங்களைக் கவனிப்பதற்கு அவர்கள் அசக்தராவர். மாதரே அதற்குரியவர்.

தம் கடமைகளைச் செவ்வனே உணர்ந்து அதன்படி குடும்பக்காரியங்களை ஒழுங்குபெறச் செய்யும் பெண்கள், வெளியிற்சென்று உத்தியோகம் செய்து பணந்தேடும் பெண்களைவிட அதிக நன்மையைத் தம் குடும்பத்திற்கு உண்டாக்குபவராவர். 'ஸ்திரீகளையும் புருஷரைப்போல் உத்தியோகம்



செய்ய அனுப்புவதே அவர்களுக்குச் சுதந்திர மளிப்பதாகும். அவ்வாறு செய்யாமல் முற்காலத்தவர் மாதரை அடிமைகளாகப் பாவித்து மிக்க இழிவான நிலைமையில் வைத்திருந்தனர்' எனப் பெருமைபேசி வாய்ப் பறை யறையும் நவீன நாகரீகத்தாரை நாமொன்று கேட்கிறோம். புருஷர் கஷ்டப்பட்டுழைத்துத்தரப் பெண்கள் வீட்டெசமானிகளா யிருந்துகொண்டு அதிகாரத்தோடு சுகமாய் உண்டு உலாவுவது அடிமைத்தன்மையோ? அல்லது புருஷரோ டொப்ப பாடுபட்டுப் பணந்தேடி யுண்பது அடிமைத்தன்மையோ? கூறட்டும். பிரியப்பட்டு அனுப்புவோரை நாம் வேண்டாமென்று கூறவில்லை. அதை இழிவாகக் கூறவுமில்லை. ஆனால் 'அப்படி அனுப்புவதுதான் நாகரீகம்' என்று கூறுவோரையே மறுக்க வந்தோம்.

இருவரும் சம்பாதித்தால் பொருள் வருவாய் அதிகமாகும் என வேறொரு நொண்டிச் சமாதானம் கூறலாம். லக்ஷாதிபதிகளாயும் கோடீசுவரராயும் முற்காலத்தி லிருந்தோரும் தற்காலத்தி லிருக்கின்றோருமாகிய யாவரும் பெண்கள் சம்பாத்தியத்தால் தான் பணக்காரரானார்களோ வென்று நாம் கேட்கிறோம். 'ஆம்' என்று ஒருவரேனும் சொல்ல வாயைத் திறக்க முடியுமோ? முடியாது முடியாது. ஆகவே, பெண்கள் ஆடவர்க்குரிய காரியங்களைச் செய்யவேண்டிய அவசியமில்லை. அவசியமாயினும் அவர்களுக்குரிய கடமைகளைக் கவனிக்குமிடத்து அவகாசமுமில்லை. அவர்கள் வேலையைச் செய்து முடிக்கவே அவர்களுக்குக் காலம் போதாதே. அவர்கள் காரியத்தைச் செவ்வையாய்ச் செய்து முடித்தலே சிறந்த ஊதியமாகும்.

இல்லறத்திற்குரிய நற்குண நற்செய்கைகளையுடைய மனைவியைக்காட்டிலும் ஒருவன் அடையத்தக்க சிறந்த பொருள் யாது? அத்தகைய மனைவி ஒரு வீட்டி லிருப்பாளானால், அவ்வீட்டில் ஒன்றுமில்லாமற் போனாலும் எல்லா மிருப்பதுபோலவேயாகும். அக்குணங்களில்லாதவளிருக்கும் வீட்டில், எல்லா மிருந்தாலும் அங்கு ஒன்றுமில்லை. தமிழ் மறையும் இதுபற்றியே

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை"

எனக் கூறுகின்றது. 'இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை' என்றார் பிறரும்.

குடும்ப காரியத்தை நிர்வகிக்கும் மனைவிக்கு முதலாவது **பொறுமை** அதாவது சகிக்கும் குணம் அத்தியாவசியமாகும். குடும்பத்தில் எத்தனையோ கஷ்டங்கள் நேரிடும். மாமன் மாமிகளால் கஷ்டங்கள் நேரிடலாம். நாத்தி ஓரகத்திகளால் துன்பம் நேரிடலாம். கணவனாலும் அநேக கஷ்டங்களுண்டாகலாம். பிள்ளைகளால் அநேக உபத்திரவங்களுண்டாகும். இத்தனையும் மனைவி பொறுமையோடு சகிக்கவேண்டும். அவரவர்களுக்குத் தகுந்தபடி சாந்தமாய் நடந்து அவரவர்களைத் திருப்திப்படுத்த முயலவேண்டும்; ஆத்திரங்கொள்ளலாகாது; 'ஆண்டி கோபத்தைக் கிடாவின்மேல் காட்டல்'போல், பிறர்மேல் உண்டாகும் கோபத்தைக் குழந்தைகள்மேல் காட்டி அவர்களைக் கண்டவாறு வைதலும் அடித்தலும் கூடாது; சிடு சிடுப்பான வார்த்தைகளை உபயோகிக்கலாகாது; முணுமுணுக்கலாகாது. இவ்வாறெல்லாம் செய்வதால் கணவன் முதலானவர்களுடைய கோபமானது 'நெருப்பில் நெய்யைச் சொரிவது'போல் அதிகரிக்கும். அதனால் வீண் சண்டை வளர்ந்து மன வருத்தமும் துன்பமுமே பிராப்தியாகும். பெரியோர்கள் கோபத்தால் ஏதாவது பேசும்போது அதற் கிணங்குவதுபோல் சாந்தமாகப் பதில் கூற வேண்டுமேயல்லாமல் எதிர்த்துப் பேசுதல் கூடாது.

பொறுமைக்குச் சமானமான பூஷணம் பெண்களுக்கு வேறெதுவுமில்லை. பொறுமையால் எல்லாக் காரியங்களையும் சாதிக்கலாம். பகைவரையும் சிநேகராக்கிவிடலாம். சாந்தத்தால் கோபத்தை வென்றுவிடுவது சுலபம். ஆகையால் குடும்பத்தில் கணவன் முதலானவர்கள் கோபத்தோடு பேசும்போது அவர்களோடு தாமும் எதிர்த்துப் பேசாமல் தாழ்மையாகப் பேசினால் அவர்கள் கோபம் நீங்கிச் சாந்தமடைவர். பிறகு எப்பொழுதும் கோபமாகப் பேசார். அதனால் இல்லறம் எவ்வளவோ சந்தோஷமும் சமாதானமு முடையதாய் இன்பத்தைத் தருவதாகும். அநேக குடும்பங்களில் பெண்களுக்கு இந்தச் சகிப்புத்தன்மை யில்லாமையால் சதா சர்வகாலமும் சண்டை சச்சரவுகள் நேரிட்டு அக்குடும்பங்கள் சீர்கேடடைகின்றன. மாதர் தங்கள் சரீரம் மிருதுவா யிருப்பதுபோல, பேச்சிலும் மிருதுவா யிருக்கவேண்டும். வெட்டெனப் பேசலாகாது. "இல்லாள் வலிகிடந்த மாற்ற முரைக்குமேல் அவ்வில் புலிகிடந்த தூறாய்விடும்" என்றபடி கடுமையான வார்த்தைகள் பேசும் மனைவியிருக்கும் வீடு புலி வசிக்கும் புதருக்குச் சமானமாகும் என்று பெரியோர் பேசியிருக்கின்றனர். எக்காலத்தும் எந்தச்சமயத்தும் மிருதுபாஷிகளாயிருக்கவேண்டும். கோபத்தை யணுகவிடலாகாது. அக்கோபம் தங்களுக்கும் பிறர்க்கும் கெடுதியுண்டாக்கும். ஆகையால் சகித்துக்கொள்ளுங் குணம் ஒன்று மாத்திரம் பெண்களுக்கு இருக்குமானால் கோபம் வராது; கோபம் இல்லாமையால் வெடு வெடுப்பான வார்த்தைகள் இல்லை; அதனால் கலகம் உண்டாதலில்லை: ஆனால் சமாதானமும் சந்தோஷமும் வளரும்.

கணவன் முதலானவர்கள் நியாயந்தவறி அக்கிரமமாக நடந்துகொண்டால் கோபம் வாராமலிருக்குமோ? என்று சகோதரிகள் கேட்கலாம். கோபம் வருவதற்கென்ன? அது எப்பொழுதுந்தான்வரும். கிரமத்தையும் அக்கிரமத்தையும் அது கவனிப்பதில்லை. ஆகையால் சகோதரிகள் இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. அதென்னவென்றால், அச்சமயத்தில்தான் பொறுமையை அதிகமாகக்கொள்ளவேண்டும். கோபத்தை மிகுதியும் அடக்கவேண்டிய சமயம் அதுவே. நியாயமானவர்களிடத்தில் கோபித்துக்கொண்டால் அஃது நியாயமாகும். அக்கிரமமானவர்களிடத்தில் கோபத்தைக் கையாளுவதால் யாதேனும் நற்பயனுண்டாகுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஒருகாலுமில்லை. ஆனால் தீமையை வெல்லத்தகுந்த உபாயம் ஒன்றுண்டு. அதுதான் பொறுமை அல்லது சாந்தம். எத்தகைய அநியாயக்காரரையும் எத்தகைய கோபக்காரரையும் சாந்தத்தால் வென்றுவிடலாம். இதைப் பெரியோர் ஓர் திருஷ்டாந்தத்தால் விளக்கியிருக்கின்றனர். அதாவது, ஓர் பாணத்தை யானையின்மே லெய்தால் அப்பாணம் அந்த யானையின் உடலில் ஊடுருவிச் செல்லும். அதே பாணத்தை ஓர் பஞ்சுக்குவியலின் மேல் எய்தால் அவ்வாறு செல்லாது. அதுபோல தீமையானது நன்மையை வெல்லாது. இரும்பாற்செய்த கடப்பாரையால் பிளவுபடாத கருங்கற் பாறையானது மிருதுவானதாகிய மாத்தின் வேரினால் பிளவுபட்டுப் போகிறது. அதுபோல சாந்தத்தால் கோபத்தை வென்றுவிடலாம் என்பதே.

> "வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்
> பட்டுருவும் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
> பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
> வேருக்கு நெக்கு விடும்."

சாதாரணமாக நாம் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவோமானால் முன்னதாக நன்றாய் யோசித்து, அதனால் ஏதேனும் ஒரு நன்மை யுண்டாகுமென்று அறிந்தபிறகல்லவோ அதைச் செய்யத் தொடங்குவோம். ஒரு நன்மையு முண்டாகாது. ஆனால் தீமையே யுண்டாகுமெனத் தெரிந்தால் அத்தகைய காரியத்தைச் செய்வோமா? செய்யமாட்டோமன்றோ! அப்படியே கோபம் வருங்காலத்தும்—பொறுமையை யிழக்கும் காலத்தும்—கடுமையாகவும் சிடுசிடுப்பாகவும் வெடு வெடுப்பாகவும் பேசுங்காலத்தும்—இவற்றால் நன்மையேதேனும் உண்டாகுமாவென்று யோசித்துப் பாருங்கள். நன்மையுண்டாகுமெனத் தெரிந்தால் செய்யுங்கள். உங்களை வேண்டாமென்று தடுப்பவர் ஒருவருமிலர். ஆகவே, நீங்கள் ஆத்திரத்தையும் கோபத்தையும் அறவே யொழித்து, சகிப்புத்தன்மையை மேற்கொண்டு சாந்தமாயிருங்கள்; எவ்வித கோபமும் தீமையும் துன்பமும் உங்களை அணுகாமல் ஓடும்.



(தொடரும்.) பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

---

## கற்பு நிலைமை.

(524-ம் பக்கத் தொடர்ச்சி)

"கணவனுக்கு வரும் வருமானப் பொருளளவிற்குத் தக்கபடி மிதமாய்ச் செலவு செய்யாமற் கண்டபடி கைகொண்டமட்டும் செலவழிக்கிறாளே! இவள் இன்னும் சில நாளில் அவன் தலையில் ஓட்டைக்கவிழ்ப்பாள்" என்று பிறர் இகழாதபடி மனைவியானவள் திறமையுடனே சிக்கனமாகச் செலவு செய்து தன் குடித்தனத்தைக் காக்கவேண்டும்; அன்றியும் உலகத்தார் இராக்காலத்துக் குதவியாகப் பகற் காலத்திலும் மழைக்காலத்திற் குதவியாகக் கோடைக்காலத்திலும், முதுமைக்குதவியாக இளமையிலும் வேண்டியவைகளைத்தேடிவைத்துப் பாதுகாப்பதுபோல, இல்வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் தருண மறிந்து சேகரித்து அவை பின்னுக்காகுமென்று அவற்றைச் சிக்கெனக் காப்பாற்ற வேண்டுமே யல்லது வீட்டிலுள்ள பண்டங்களை அநியாயத்தில் அழிக்கலாகாது.

ஆணாய்ப் பிறந்தவர் பிதாவானாலும், சகோதரரானாலும், பெற்ற பிள்ளையானாலும, அவர் இருக்குமிடத்தில் அச்சமின்றி இருக்கலாகாது. ஐந்துவயது ஆண்பிள்ளையைக் கண்டால் ஐம்பது வயதுப் பெண்பிள்ளையும் எழுந்திருக்க வேண்டுமென்கிறார்களே.

"அகத்தினழகு முகத்தில் விளங்குவது" போல் குணத்தின் அழகு நடையில் விளங்கும். பெண்மக்கள் பூமாதேவிக்குச் சமானம்; பொறுமைக்கு உறைவிடம்; ஆதலால் அன்னம் போலவும் பெண்யானையைப் போலவும் மிருது நடையாகத் தலை இறங்கி நடக்கவேண்டும்; கண்ணின் திருஷ்டி கருத்துள்ள விடத்திற் போகுமாதலால் தன் கால் பெருவிரலைப் பார்த்து நடக்க வேண்டும். கற்புடை மகளின் திருஷ்டியெல்லாம் தன் மூக்கு நுனியிலிருந்து கால் பெருவிரல் வரையில் தான் செல்லவேண்டும்;

அதாவது மனத்தை பஹிர் முகத்தில் அலைய விடாமலும், அந்தர் முகப் பார்வை கெடாமலும் வெளி வியவகாரங்களை நடத்த வேண்டும். அந்தர் முகப்பார்வை பஹிர் முகப்பட்டால் மனம் விஷயப் பற்றுக்களி லாழ்ந்து சிதறிப்போம். கற்புடைமைக் கடையாளம் மனதைச் சிதறவிடாது காப்பதாம். மனக்காப்பே காப்பன்றி மதில்காப்பு காப்பல்ல என்கிறார்களே. பெண்கள் பூமி அதிரும்படி நடந்தால் மனமும் அதிர்ந்துபோம்; சாந்தி கலைந்துபோம்; மற்றும்,

ஆண் மக்களிலாவது பெண்மக்களிலாவது துஷ்டர்களாயிருக்கின்றவர்கள் தங்களைத் தாரதம்மியம் பாராமல் அக்கிரமமாகப் பேசினால், "அதென்ன உடம்பிலே காய்த்துத் தொங்குகிறதா" "நாய்குலைக்க நந்தம் பாழாமா?" என்று நினைத்துச் சாதுவாய்ப் போகவேண்டுமே யல்லாமல் அவர்களை எதிரிட்டுப் பத்ரகாளியைப்போல் அஞ்சாது "தெருச்சண்டைக்கு இடுப்புக் கட்டல்" ஆகாது. இதைத்தான் "உபேக்ஷை" என்று சொல்வது; பின்னும்,

கணவனாவது மற்றவர்களாவது ஏதேனும் ஒன்றைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தால் அது என்ன சமாச்சாரமென்று அவர்களை நேரே விசாரிக்கவும் சாடையாய்க் கதவின் சந்தில் அல்லது சுவர்க்கோழிபோல் சுவரின் அருகில் ஒன்றியிருந்து கேட்கவுங் கூடாது. ஏனெனில் ஒட்டுக் கேட்கும் சுபாவம் மிகவும் கெட்டது. அது நம்பிக்கையைக் கெடுத்து, குடித்தனத்தில் கலகத்தை உண்டு பண்ணும்.

இவ்வாறு சொன்னதனால் சமுசாரக் கூர்மை யில்லாமலிருக்க வேண்டுமென்பது கருத்தல்ல; சமுசார விஷயங்களில் எப்போதும் கண்ணும் கருத்துமாய்ப் புத்தி கூர்மையோடிருக்கவேண்டியதே. சிலபெண்கள் மாமி வீட்டுக்கு வந்தவுடனே ஆரம்ப சூரத்துவமாய் எல்லாரும் ஒப்ப நடந்து, வரவர அசாக்ரதையினால் சோம்பல் மேலிட்டு, குடித்தனப் பொறுப்பில்லாமல் அலக்ஷியமாய் "எவனோ செத்தான் அவள் ஏன் அழுதாள்" என்பதுபோல் இருப்பதுண்டு. அது சுத்தப்பிசகு; கற்புடைய பெண்டிர் அப்படியிருக்கலாகாது.

"கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை" ஆதலால் வாக்கின் நாணயம் குறையாதபடி நடந்து கொள்ளவேண்டும்.

புருஷனுக்குப் பொருள் வரவின்றி அவன் வறுமைப் படுங்காலத்தில் அவன் சம்பாதிக்கவில்லையே யென்று அவனைச் செல்லரிப்பதுபோல் எந்நேரமும் வருத்தப்படுத்தக் கூடாது. தௌர்ப்பாக்கியம் வந்தால் இது புருஷனுடைய அசாக்ரதையால் தான் வந்தது என்று நினைக்கலாகாது. "ஏருழுகிறவன் என்ன செய்வான் பானை பிடித்தவள் பாக்கியம்" என்பதுபோல மனைமாட்சியுண்டானால் எப்பேர்ப்பட்ட புருஷனும் பாடுபட்டுழைக்கப் பின் வாங்கான். ஏனெனில் உழைப்பிலிருக்கின்றது பிழைக்கும் வழி. புருஷன் உழைக்கப் பிறந்தான், பெண் செலவிடப் பிறந்தாள் என்பதை மறக்கக் கூடாது. வெளியிலேபோய், புருஷன் என்ன பாடுபட்டுழைத்தாலும், வீடுவந்தால் அவன் சிரமமும் கவலையும் கிலேசமும் நீங்கவேண்டும்; அந்த இடமேவீடு. அதற்கு மனையாள் உத்தரவாதியாயிருக்கிறாள். அவள் கிரஹ தேவதைபோல் வீட்டைச் சாந்தம் விளங்க க்ஷேமகரமாய் வைத்திருக்கவேண்டும்.

பெண்மணிகள் பரபுருஷருடைய முகத்தைப் பாராமலும், அவர்களுக்கெதிரே பல்லைக் காட்டிச் சிரிக்காமலும் பரிகாசஞ்செய்யாமலும், பக்குவமாயிருக்கவேண்டும். "சிரித்தையோ சீரைக் குலைத்தையோ" என்னும் மொழியும் உலகில் வழங்குகிறதே. ஆகையால் உத்தமஸ்திரீகள் மனக்காப்பு விஷயத்தில் வெகு ஜாக்ரதையாயிருக்கவேண்டும்.

தாமரையில்லாத தடாகமும், சந்திரனில்லாத ஆகாயமும், புலவர்களில்லாத சபையும், அரசனில்லாத நாடும், மந்திரியில்லாத அரசாட்சியும், படைத்தலைவனில்லாத சேனையும், தெய்வஸ்துதியில்லாத நாவும், நற்சிந்தையில்லாத நெஞ்சும், கிருபையில்லாத கண்ணும், பயனில்லாத சொல்லும், மணமில்லாத மலரும்போலக் கற்புடை மனைவி யில்லாத வீடு சிறப்பின்றி இடுகாட்டுக் கொப்பாம்.



கண்டவர்கள் கேட்டவர்களெல்லாம் "இந்த உத்தமி கல்வியிற் கலைமாதோ! கற்பில் அருந்ததியோ! கருணையிற் பார்வதியோ! பரிசுத்தத்திற் பவானியோ! என்று அதிசயிக்கும்படி விவேகமும், கற்பும், இரக்கமும், சுசியும் உள்ளவளா யிருக்கவேண்டும்.

"இல்லதென் இல்லவள் மாண்பானால்" என்கிறபடி இல்லமுடையாள் (மனைவி) நற்குண நற்செய்கைகள் பொருந்தியவளானால் கணவனுக்கு இல்லாதது ஒன்றுமில்லை. அப்படிப்பட்ட மனைமாட்சியில்லாத விடத்து கணவனுக்கென்ன விருந்தாலும் பயனில்லை. ஆகையால் பெண்கள் "மனைமாட்சி" யுடையவராய் இருக்கவேண்டும்.

இம்மையில் தம்தம் கணவரைப் பூஜித்த பெண்கள் மறுமையில் தேவர்களால் பூஜிக்கத்தக்க பெருஞ் சிறப்புற்றவர்களாவார்கள்; பெண்கள் தமது கற்பினால் காக்கும் காவலே காவலாவதன்றி அவர்களைக் கணவர் சிறையினால் காக்கும் காவல் என்ன பயனைச் செய்யும்.

"அறைகாத்தான் பெண்டிழந்தான்" என்பது பழமொழி.

S. நரசிம்மம்.

# கை குலுக்குவதன் பயன்

நண்பர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது கையைப் பிடித்துக் குலுக்குவது இப்போது எங்கும் வழக்கமாய்விட்டிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள 'மிசிகான் சர்வகலாசாலை" யைச்சேர்ந்த டாக்டர் "ஜான் சண்ட்வால்" என்பார் இவ்வழக்கத்தைக் கண்டித்து ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் பின் வருமாறு எழுதி யிருக்கிறார்: "கை குலுக்குவதால் இன்புளுவென்சாபோன்ற பல வியாதிகளுண்டாகின்றன. நோய்களை உண்டாக்கும் கிருமிகள், மனிதரின் வாய், மூக்கு ஆகியவைகளினின்று வெளிவரும் வஸ்துக்களில் கலந்திருக்கின்றன. ஒவ்வொரு மனிதனுடைய கையிலும் இத்தகைய கிருமிகள் இருக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டே தீருகின்றது. எப்படியெனில் மூக்கைச் சிந்தும்போதும், வாயில் எதையாவது கொடுக்கும் போதும், எடுக்கும்போதும், நாம் கைகளை உபயோகிக்கவேண்டியதா யிருக்கிறது.

இம்மாதிரியான கையில் நோயுண்டாக்கும் கிருமிகள் ஒட்டியிருப்பது சாதாரணம். இத்தகைய கையைக்கொண்டு நண்பருடைய கையைப் பிடித்துக் குலுக்கினால் மேற்கூறிய கிருமிகள் அவர் கையில் ஒட்டிக்கொண்டு அவர் வாயில் கையைவைக்கும்போது வாய்க்குள் சென்றுவிடுகின்றன. இன்னும் இருமல், ஜலதோஷம் ஆகிய இவை போன்றவைகளால் பீடிக்கப்படுவோர் தும்மலைத் தடுக்கவோ அல்லது இருமலை ஒடுக்கவோ கையால் வாயை மூடுகின்றனர். அப்போது கிருமிகள் அக்கையில் சேருகின்றன. உடனே அவர்கள் தங்களுடைய நண்பர்களைக் கண்டபோது அக்கையால் அவர்களுடைய கையைப்பற்றிக் குலுக்குகின்றனர். இம்மாதிரி செய்வதனால் அநேகமாய் அவரிடமுள்ள அந்த நோய்கள், அவர்களுடைய நண்பரிடத்தும் பரவுகின்றன. ஆதலின் இத்தகைய கைகுலுக்கும் பழக்கத்தைக்கொண்டு இன்புளுவென்சா முதலிய நோய்களைத் தேடிக்கொள்ளாதீர்கள்".




## திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீ உடையவருக்குத் தெரிவித்த பதினெட்டுத் திருமொழிகள்.

(1) சேற்றிலுள்ள பிள்ளைப்பூச்சிக்கு அச் சேறு ஒட்டாததுபோல ஞானிக்குப் பிறப்பிடம் லோகமேயானாலும் அவனுக்கு லோகவாசனை சேராது அதுபோல முமுக்ஷுவுக்குச் சம்ஸார பீஜம் நசிக்கவேண்டும்.

(2) அக்னியிலே பிறந்த விளக்கானது சீதளமான காற்றினாலே அமருவதுபோல சாத்வீகம் தலை யெடுத்தால் அகங்கார மமகாரங்கள் நிவர்த்தியாம். அதுபோல சம்ஸாரபீஜம் நசித்தா லொழிய அகங்கார மமகாரங்கள் நிவர்த்தியாகமாட்டா.

(3) அகங்கார மமகாரங்கள் நிவர்த்தியானா லொழிய தேகாபிமானம் போகாது.

(4) தேகாபிமானம் போனாலொழிய ஆத்மஞானம் பிறவாது.

(5) ஆத்மஞானம் பிறந்தாலொழிய ஐசுவரிய போகாதிகளில் உபேக்ஷை பிறக்கமாட்டாது.

(6) ஐசுவரிய போகாதிகளில் உபேக்ஷை பிறந்தாலொழிய பகவத் ப்ரேமம் பிறக்கமாட்டாது.

(7) பகவத் ப்ரேமம் பிறந்தாலொழிய விஷயாந்தர ருசி நீங்காது.

(8) விஷயாந்தரருசி நீங்கினாலொழிய பாரதந்த்ரியம் பிறவாது.

(9) பாரதந்த்ரியம் பிறந்தாலொழிய அர்த்த காம ராகத்வேஷாதிகள் ஒழியா.

(10) ராகத்வேஷாதிகள் ஒழிந்தாலொழிய ஸ்ரீவைஷ்ணவத்வம் கைகூடாது.

(11) ஸ்ரீ வைஷ்ணவத்வம் கைகூடினாலொழிய சாத்வீக பரிக்ரஹம் பிறவாது.

(12) சாத்வீக பரிக்ரஹம் பிறந்தாலொழிய பாகவத பரிக்ரஹம் பிறவாது.

(13) பாகவத பரிக்ரஹம் பிறந்தாலொழிய பகவத் பரிக்ரஹம் பிறவாது.

(14) பகவத் பரிக்ரஹம் பிறந்தாலொழிய அனன்ய ப்ரயோசனனாகமாட்டான்.

(15) அனன்ய ப்ரயோசனனாகாதே அனன்யார்கசேஷபூதனாகமாட்டான்

(16) அனன்யார்க சேஷபூதனாகாமல் அனன்ய சரணனாகமாட்டான்.

(17) அனன்ய சரணனாகாமல் அதிகாரி புருஷனாகமாட்டான்.

(18) அதிகாரி புருஷனானவனுக்கே திருமந்த்ரார்த்தம் கைகூடும்.

ஓரன்பன்.

ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் கூறிய

## மானிடர் இயல்பு.

(மொழி பெயர்ப்பு)

மஹிதலம் நாடக மண்டப மொக்கும்;
அந்தமண் டபத்தில் ஆடவர் மாதர்கள்
தங்கி நடிக்குந் தன்மைய ராவர்;
மற்றுமாங் கந்த மக்கள் வருவதும்
போவது மாகப் பொருந்தி யிருப்பர்;
மனித னொருவன் தனதுவாழ் நாளில்
பலவித வுருவம் பற்றிநின் றெழுநும்
நடிப்பை யினிது நாடிநிற் கின்றனன்;
அன்னவன் நடிப்பேழ் அங்க முடையது;
அவற்றுள் முதலாம் அங்கமோ குழந்தைப்
பருவமாம்; அந்தப் பருவந் தன்னில்
தாதியின் கரத்தில் தங்கி யிருந்து,
அழுதும் வாய்நீர் ஒழுக விடுத்தும்,
காலந் தன்னைக் கழிக்கின் றானால்;
இரண்டாம் அங்கம் எய்து கிறான்பின்;
இதுவே பாலப் பருவம் எனலாம்;
இப்பரு வத்தில் இவன்றான் சிணுங்கும்
பாட சாலைப் பையனாய்க் கையில்
புத்தகம் அடங்கிய சித்திரப் பையொடு
இளஞ்சூ ரியன்போல் இலங்கு முகத்துடன்
பள்ளிக் கேகும் பட்சமில் லாமல்
நத்தையை யொத்து நகரு கின்றான்;
அதன்மேல் மூன்றாம் அங்கமடை கின்றான்; (அதுதான்)
கட்டுக் கடங்காக் காளைப் பருவமாம்; (அதில்)
மங்கையின் மையலில் மனதை நுழைத்துக்
கொல்லன் உலைக்களங் கொதித்தெழுந் தீப்போல்
மூச்சுவிட் டவளை முகத்துதி செய்து,
களிப்புற வைத்துக் கலித்துறை பாடிக்
காமவின் பத்திற் காலம் கழிக்கிறான்;
நான்காம் அங்கம் நல்லபோர் வீரனாய்
நடிக்கும் பருவமாம்; நன்கதிற் றனது
வீரதீ ரத்துவம் வெளிப்படக் காட்டிச்
செருக்குரை யுரைத்துச் சிலமிரு கங்களுக்
கிருப்பது போலும் இயைந்த தாடியை
யுடையவ னாகி, யோங்குதன் மானந்
தனிலபி மானந் தழைக்க வேந்தி,

திடீரென வம்விரை வாகவுஞ் செய்யும்
போர்த்திற மறிந்த புருடனாய் நின்று,
பீரங்கி வாயிலும் பிழைக்கும் உபாயம்
பெறும்புக ழாளனாய்ப் பிறங்கு கின்றான்;
ஐந்தாம் அங்கம் ஆம்தன தறிவின்
ஆட்சியைக் காட்ட அமைபரு வத்தில்
உரோமம் அடர்ந்த உன்னத மார்புடன்
அழகும் வட்டமும் ஆர்ந்த தொந்தியும்,
தீட்சண்ய பார்வை செறிந்த கண்களும்,
ஒழுங்காய் வெட்டப் பட்டுநன் கொளிரும்
தாடியும், நீதி சார்பழ மொழிகளும்,
சாதா ரணவு தார ணங்களை
இனிதா யிசைக்கும் ஏற்றமும் உடைய
நியாயாதி பதியாய் நிலவு கின்றான்;
ஆறும் அங்கம் ஆம்விருத் தாப்பிய
பருவ மதனில் பண்புறும் புத்தி
கூர்மை யிழந்து குறுக நின்று,
மங்கிய பார்வைக் கிங்கித மாக
மூக்குக் கண்ணாடி மூக்கில் விளங்க,
கன்னங் குழிந்து காண, இளைய
வயதிற் றைத்து வைத்த வுடைகளைக்
கால்கள் தளர்ந்து விளைந்தகா ரணத்தால்
பிகுவு குறையப் பெரிதும் அணிந்து,
ஆண்மை பொருந்தி யமர்ந்தவாய்ச் சொற்க
மழலைச் சொற்களாய் மாறவல் லோசை
ஊது குழல்களின் ஓசையை யொக்க,
நடையா டுகிறான் ஞால மிசையே;
ஏழாம் அங்கம் இவைகளுக் கெல்லாம்
கடைசி யான காட்சிப் பருவம்;
இதிலிவ னுடைய அதிசய முடிவைக்
கொண்ட சரித்திர மண்டு கின்றது;
இரண்டாந் தரமிவன் இளங்குழந் தையின் செயற்
கிலக்காய் மறதி யெய்துவ தோடு
பற்களும் பார்வையும் பகர்ருசி யறிதலும்
மற்றுள வுணர்ச்சியும் அற்றவ னாகிறான்.

ம. இராஜகோபால பிள்ளை.

---

**சந்தாதாரர்களுக்கு:—**சந்தா நம்பர் தெரியாதவர்கள் மாதமாதம் வரும் சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.




## சித்த வைத்திய விருத்தி.

(512-ம் பக்கத் தொடர்ச்சி.)

சென்ற மாத சஞ்சிகையில் எழுதியுள்ள சித்த வைத்திய மகாநாடு விஷயமாய் மீண்டும் சிலவற்றைக் கூறிப் பின்னால் வைத்தியத்தைப்பற்றி வரையத் துணிந்துள்ளேன். முன் சஞ்சிகையைப் பார்த்துள்ளவர்களில் சிலருக்குச் சில விஷயங்களால் ஆயாசம் ஏற்பட்டிருக்கலாம். அதாவது, இதுவரையில் சித்த வைத்தியசங்கமே இல்லாமலிருந்து இக்காலத்தில் வெகு சிரமப்பட்டு ஓர் சித்த வைத்திய சங்கத்தை ஏற்படுத்தி ஒருவராயினும் நடத்தி வருவதற்குக் குறைகூறுவதாக நினைத்து ஆயாசப்படக்கூடும். அப்படி நினைப்பது தவறு. நமது சித்த வைத்தியம் முன்னேற்ற மடையவேண்டியதற்கான விஷயங்களையே தெரிவிக்க முன் வந்தேன். அதற்காகச் செய்யவேண்டிய வேலைகள் பலவுள. அவற்றில் முக்கியமாய் ராஜங்கத்தார்களால் ஏற்படுத்திருக்கும் சித்த வைத்திய கல்விச்சாலைக்குப் பாடபுஸ்தகங்கள் அமைத்தல், இங்கிலீஷ் வைத்தியத்திலும், ஆயுர்வேத வைத்தியத்திலும் ஏற்பட்டுள்ளதுபோல் சிற்சில பொதுவான மருந்துகளையும் பல வைத்தியர்களுக்கும் அனுபவமாயுள்ள மருந்துகளையும் வெளியிட்டுக் கூடியவரையில் பலரும் வாங்கிக் கையாளச் செய்வது, ராஜாங்கப் பள்ளிக்கூடமன்றியில் வேறு பள்ளிக்கூடங்கள் தனித்தமிழிலேயே பாடங்கள் நடத்துமாறு ஜில்லாக்கள் தோறும் அமைத்தல், வைத்திய பத்திரிகைகள் நடத்தல் முதலிய இத்தகைய காரியங்களைச் செய்யவேணடியது சித்த வைத்தியர்களுக்கு ஓர் முக்கியமானது என்று நான் கருதுகின்றேன். மேற்சொல்லிய விஷயங்களில் வேலைசெய்வதுதான் சித்த வைத்திய மகாநாட்டுக்கு உரியது.

மகாநாடானது ஒருவர் இருவரின் முயற்சியாலேயே நடக்கவேண்டியதாயிருந்தாலும் பொதுப்பணத்தையும் அதன் விவகாரங்களையும் பொது ஜனங்கள் வசமே ஒப்படைக்கவேண்டும். அகில இந்திய காங்கிரஸ் மகாநாடு ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி, கோகலே ஆகிய இவர்களாலேயே நடந்தபோதிலும் ஆரம்பத்திலிருந்தே பொதுஜனங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது உலகறிந்த விஷயம்.

சென்னையில், "ஆந்த்ர ஆயுர்வேத பார்மஸி" ஸ்ரீமான் டாக்டர் லக்ஷ்மீபதியவர்களின் முயற்சியாலேயே நடத்தப்பட்டாலும் ஆரம்பத்திலிருந்தே பொதுஜனங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டதும் பிரசித்தம்.

சென்னையில் சித்த வைத்தியத்தில் அதிக ஆராய்ச்சியுள்ள பெரியோர்கள் பலர்சேர்ந்து ஓர் கூட்டம்கூடி, மேற்சொல்லிய விஷயங்களைப் பூர்த்திசெய்வதற்காகச் சுமார் பத்துலக்ஷம் ரூபாய் மூலதனத்துடன் ஒரு லிமிட்டெட் கம்பெனி ஏற்படுத்தி, தக்க பெரிய மனிதர்களில் 7-அல்லது 9-பேர்களை அக்கம்பெனிக்கு (Director) நடத்துவோராக அமைத்துக் கம்பெனியை நடத்தும் (Managing Director) காரிய நிர்வாக அதிபரையும் நியமித்து, வக்கீல் வரையும், கணக்குப் பரிசோதனைக்காக கவர்ன்மெண்ட் பரிசோதகர் ஒரு

வரையும் நியமித்து, ஷேர் அதாவது பங்கு 1-க்கு ரூபாய் 10 ஏற்படுத்தி அந்தப் பங்குக்காரர்கள் மனுவுடன் 1-ரூபாய் கட்டவேண்டுமென்றும், மனுவைப் பரிபாலகர்களால் அங்கீகாரம் செய்யப்பட்டபின் 3 மாதத்திற்குள் வேண்டும்போது 2 ரூபாய் விகிதம் ஷை 10 ரூபாயை வசூல் செய்வதென்றும் தீர்மானித்து அதற்குவேண்டிய முயற்சிகளை நடத்தி வருகின்றார்கள். கடவுள் கிருபையால் கூடியசீக்கிரம் இம்முயற்சி பூர்த்திபெறுமென நினைக்கின்றேன். இது சம்பந்தமான விஷயங்கள் பின்னர் விஸ்தாரமாய் வெளிவரும். அச்சமயம் இதன் பெருநோக்கங்களையும், சித்தவைத்தியம் முன்னேற்றமடைய ஏற்படுத்தும் மார்க்கங்களையும் கவனித்துச் சகலரும் அதில் பங்கெடுத்துக் கொண்டும் பங்கெடுக்க முயற்சிசெய்தும் வருவார்களென நம்புகின்றேன்.

முப்பூவைப்பற்றி வாதங்கள் நடக்கவேண்டிய காலமிதுவல்ல. தற்காலத்திற்கு அத்தியாவசியமான விஷயங்கள் பல விருப்பதால் அவற்றைப் பூர்த்திசெய்துகொண்டு நாமும், நம்மைச் சார்ந்தவர்களும் நோயால் வருந்துவதைத் தீர்ப்பதற்கு வேண்டிய சிகிச்சைகளையும், நோயணுகாமல் காத்துக்கொள்ள வேண்டிய விதிகளையும் செய்துகொண்டு பிறகு முப்பூவைத்திருக்கும் பெட்டியைத் திறக்கச் சாவியைத் தேடுதற்கு முப்பூவில் அதிகப் பயிற்சியுள்ள ஒரு சிலரை நம்பொருட்டாக ஆராய்ச்சித் தொழிலில் விட்டுவிடலாம்.

முப்பூ என்பது சகலர்களாலும் விரும்பத்தக்கதேயானாலும் முப்பூ செய்யும் பாகங்கள் பல சித்தர்களால் பல மாதிரிகளில் பாடி வைக்கப்பட்டிருக்கின்றன. அதன்வழி தெரிந்து செய்பவர்களையும், செய்தவர்களின் மூலமாய்த் தெரிந்துகொள்பவர்களையும் பற்றிய விஷயங்களைவிட்டுச் சரீரசுகத்திற்கும், ஆத்மலாபத்திற்கும் ஏதுவான வேறு இலகுவான சில விஷயங்களை ஆராய்ச்சி செய்யலாம்.

முப்பூ வென்பது உயர்ந்த வஸ்துவாய் இருந்தாலும் அதைச்செய்து முடித்து உபயோகத்தில் கொண்டுவருவது கஷ்டசாத்தியமா யிருப்பதால் முப்பூ இல்லாமலே சரீரத்தை நீடிக்க வைத்துக்கொள்ளச் சுலபமாயும், எல்லாராலும் அனுஷ்டிக்கக்கூடியதாயு மிருப்பதான மார்க்கத்தைப் பின்பற்றுவது நலந்தரும்.

நமது சித்தர்கள் நமக்கு நாள் ஒன்றுக்கு 21600 சுவாசமென்றும், இந்த 21600 சுவாசமே ஒருநாள் என்றும், இப்படி 365 நாட்கள் கொண்டதே ஒருவருஷமென்றும், அப்படி 100 வருஷம் கொண்டது மனிதரின் ஆயுள் என்றும் கூறியிருக்கின்றார்கள். இவற்றை நோக்குமிடத்து 21600 சுவாசமே, சூரியோதயம் முதல் பகல் இராக்கொண்ட 24-மணிநேரம் என்பது துணியப்படும். இத்தகைய 21600 சுவாசங்களை, கிரமமாகச் சுவாசத்தை இழுத்தல், தடுத்தல், விடுத்தலாகிய சாதனங்களால் குறைத்துக்கொள்ளும் பழக்கத்தைக் கைக்கொள்வோமானால் நாம் ஆயுளை விருத்தி செய்துகொள்ளலாம். இச்சாதனமானது நம்தேசத்தில் சகலராலும் கையாளப்பட்டதே. ஆனால் ஆரியர்கள் நம்தேசத்திற்குவந்த பிறகு, சகலருக்கும் அனுபவத்திலிருந்துவரும் சுவாசத்தைச் சரிவர நடத்தும் சாதனத்தைத் தாங்கள் தாம் செய்யவேண்டியவர்கள் என்றும், மற்றவர்கள் செய்யக்கூடாதென்றும் தீர்மானித்து, சமஸ்கிருதபாஷையில் அதை சௌசம், ஆசமன்னியம், ஸ்நாநம், பிராணாயாமம், சந்தியாவந்தனம் என்று பாகுபாடுபண்ணி இச்சாதனங்களைப் பிராம்மணனே செய்யவேண்டும், மற்றையோர்கள் செய்யக்கூடாது என்று நாளதுவரையில் சொல்லிக்கொண்டு வருவதுமில்லாமல் மீறிச்செய்பவன் பாவத்திற்குள்ளாவான் என்றும் சொல்லுகின்றார்கள்.

*



ஆனால் இது அநியாயமான காரியம். சுவாசத்தைச் சரிவர நடத்துவது சகலர்க்கும் பொதுவானதாயிருக்க ஒரு சார்பார்தாம் செய்யவேண்டுமென்பது பொருந்தாது. நிற்க, சுவாசத்தைப் பழகவேண்டிய விதிகளும், அவற்றின் பத்தியங்களும் இதே சஞ்சிகையில் வெளிவந்துகொண்டிருப்பதால் அதைப்பற்றி விஸ்தாரமாய் எழுதுவது அவசியமில்லாததால் முக்கியமான சில விஷயங்கள் மாத்திரம் அடுத்த சஞ்சிகையில் வெளிவரும்.

(தொடரும்.) டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்.

---

## டைபாயிட் என்னும் விஷசுரமும் அதைத் தடுக்கும் முறைகளும்.

டைபாயிட் என்னும் விஷசுரத்தைத் தடுப்பதற்கான முறைகளை ஒவ்வொருவரும் அறிந்துகொள்வது அத்தியாவசியம். டைபாயிட் அல்லது குடல் சம்பந்தமான சுரமானது, அந்த விஷசுரத்தால் பீடிக்கப்பட்ட மனிதனுடைய குடலில் இருக்கும் ஒருவிதக் கிருமியினால் உண்டாகிறது. டைபாயிட் சுரத்தை உண்டாக்கும் கிருமிகள் அம்மனிதனுடைய தேகத்தில் அதிகமாக விருத்தியாகின்றன. வேறு இடங்களில் அக்கிருமிகள் இருந்தால் அவைகள் பெரும்பாலும் இறந்துவிடுவது நிச்சயம். டைபாயிட் கிருமிகள் ஒரு மனிதனிடமிருந்து இன்னொரு மனிதனிடம் போய்ச் சேர்கின்றன. வெளியிலும் டைபாயிட் கிருமிகள் சில மணிநேரம் அல்லது சிலநாள் வரை உயிருடன் இருக்குஞ் சக்தியைப் பெற்றிருக்கின்றன. அப்போதுதான் அவைகள் டைபாயிட் சுரம் இல்லாத மற்றவர்களுக்கும் தொத்திக்கொள்ளுகின்றன. டைபாயிட் புழுக்கள் ஒரு மனிதனுடைய தேகத்திலிருந்து அவன் கழிக்கும் மல ஜலங்களாலும் வாயிலிருந்து உமிழும் எச்சிலாலும் வெளிவருகின்றன. ஒரு துளி மூத்திரத்தில் பத்து லட்சக்கணக்கான டைபாயிட் புழுக்கள் இருக்கின்றன. டைபாயிட் சுரத்தால் பீடிக்கப்பட்டவனுடைய பாத்திரங்களிலும், படுக்கைகளிலும், ஆடைகளிலும் இன்னும் அவனால் உபயோகிக்கப்பட்ட மற்றப் பொருள்களிலும் டைபாயிட் சுரக் கிருமிகள் இருக்கும். அவைகளைப் பிறர் உபயோகித்தால் டைபாயிட் சுரக் கிருமிகள் கட்டாயம் அவர்களைத் தொத்திக்கொண்டே போகும். டைபாயிட் கிருமிகள், சாப்பாட்டு மூலமாயும், நகங்கள் மூலமாயும், ஈக்கள் மூலமாயும், மலத்தின் மூலமாகவும் மனிதர்களிடம் போய் அடைகின்றன.

டைபாயிட் கிருமிகள் அவ்வாறு பல வழிகளிலும் மனிதனைச் சேரும் விதங்களாவன:—(1) அசுத்த ஜலத்தில் டைபாயிட் கிருமிகள் இருக்கும். ஆகவே மனிதர் அசுத்த ஜலத்தைக் குடிப்பதாலும் அதில் மூழ்குவதாலும் அக்கிருமிகள் அவருடைய தேகத்திற்குள் செல்லுகின்றன. (2) பச்சையாய் இருக்கும் பாலில் டைபாயிட் கிருமிகள் ஜலத்தில் விருத்தியாவதைக் காட்டிலும் அதிகமாக விருத்தியாகின்றன. அதை உட்கொண்டால் அவை வயிற்றிற் சேர்கின்றன. ஆகவே பாலைச் சுத்தமாக வைப்பதுடன் நன்றாய்க் காய்ச்சவும் வேண்டும். (3) டைபாயிட் சுரத்தால் பாதிக்கப்படும் ஒருவனின் மலமும் வாந்தியும் வெயிலில் உலர்ந்து அவற்றின் சாரம் காற்றின் உதவியால் பிறமனிதரின் சாப்பாட்டில் போய்ச் சேர்வதாலும், அக்காற்றை ஜனங்கள் சுவாசிப்பதாலும் டைபாயிட் சுரம் பரவுகிறது. (4) வீடுகளில் இருக்கும் ஈக்களினால்தான் டைபாயிட் சுரம் அதிகமாகப் பரவுகிறது. ஈக்கள் டைபாயிட் சுரத்தால் பீடிக்கப்பட்டவனுடைய மலம் வாந்தி ஆகிய இவைகளின்

மேல் உட்கார்ந்து அப்படியே மற்றவர்களுடைய சாப்பாட்டின் பேரில் வந்து உட்காருகிறது. அதனாலும் டைபாயிட் சுரம் பரவுகிறது. (5) சாக்கடைத் தண்ணீர் கலக்கும் நீர்நிலைகளில் பிடிக்கப்படும் மச்சவகைகளிலும் டைபாயிட் கிருமிகள் இருக்கின்றன. அவற்றைப் புசிப்பதனாலும் டை சுரம் பரவுகிறது. (6) டைபாயிட் சுரத்தால் பீடிக்கப்பட்டவனைக் கவனித்து வருபவர்களின் கைகால்களிலும் டைபாயிட் கிருமிகள் இருக்கும். ஆகவே அவர்கள் கைகால்களை நன்றாகச் சுத்தஞ் செய்துகொண்டும் துணிகளை உதறிக்கொண்டும் மற்றக் காரியங்களில் பிரவேசிக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் அவர்கள் ஆகாராதிகளைத் தொட்டால் அவர்களிடம் இருக்கும் டைபாயிட் கிருமிகள் ஆகாராதிகளில் கலந்து அதைச் சாப்பிடுகிறவர்களுக்கும் டைபாயிட் சுரத்தை உண்டாக்கும். (7) டைபாயிட் கிருமிகள் உள்ள பதார்த்தவகைகளையும் பழவகைகளையும் நன்றாய்ப் பார்த்துக் கவனித்து நீக்கவேண்டும். அவ்வாறு நீக்காவிட்டால் அவைகளின் மூலமாயும் டைபாயிட் கிருமிகள் மனிதர்களிடம் பரவும். (8) டைபாயிட் சுரம் கண்டு சௌக்கியமானவர்களில் சிலருக்கு மாதக்கணக்காகவும் வருஷக்கணக்காகவும் டைபாயிட் கிருமிகள் அவர்கள் வெளிவிடும் மல ஜலங்களினின்று வந்துகொண்டிருக்கின்றன. ஆதலின் மனிதர் அவற்றின் காற்றிற் படாதிருக்கவேண்டும். (9) டைபாயிட் சுரத்தால் பாதிக்கப்படாதவர்களுடைய மல ஜலங்களிலும் டைபாயிட் கிருமிகள் இருக்கின்றன. நியூயார்க் நகரைச் சேர்ந்த ஒரு சுயம்பாகியின் மூலமாய் இருபத்தாறு பேருக்கு டைபாயிட் சுரம் உண்டாயிற்று.

இனி, டைபாயிட் சுரத்தைத் தடுப்பது எவ்விதம் என்பதைப் பற்றிக் கவனித்து அதற்கான மார்க்கங்களைத் தேடவேண்டும். அவையாவன:— (1) முதலிலேயே டைபாயிட் சுரத்தைக் கண்டு அதைப் பரவவொட்டாமல் தடுக்கவேண்டும். (2) டைபாயிட் சுரத்தால் பாதிக்கப்பட்டவர்களை மற்றவர்களுடன் சேர்க்காமல் தனியாய் வைக்கவேண்டும். (3) டைபாயிட் சுரத்தால் பீடிக்கப்பட்டிருப்பவர்களின் மலஜலங்களை அகற்றிக் கொளுத்திப் புதைத்துவிடவேண்டும். (4) டைபாயிட் சுரத்தால் பீடிக்கப்பட்டவர்களின் பொருள்களையும் அவர்களைக் கவனித்து வருபவர்களின் பொருள்களையும் சுத்தஞ் செய்யவேண்டும். (5) டைபாயிட் கிருமிகள் ஒருவரிடமிருந்து இன்னொருவரிடம் தொத்திக்கொள்ளாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும். (6) சாப்பிடுவதற்கு முன் கைகால்களைச் சுத்தஞ்செய்து கொள்ளவேண்டும். (7) சுத்தமான ஜலத்தையே பருகவேண்டும். அசுத்தமான இடங்களிலுள்ள ஜலத்தைப் பருகக்கூடாது. தண்ணீரைக் காய்ச்சிக் குடிக்கவேண்டும். (8) அசுத்தமான ஜலத்திலும் டைபாயிட் கிருமிகள் இருக்கும் என்று சந்தேகிக்கத்தக்க நீர் நிலைகளிலும் குளிக்கக்கூடாது. (9) காய்ச்சின பாலையே குடிக்கவேண்டும். (10) பச்சையான மீன் வகைகளை உட்கொள்ளக்கூடாது. (11) சமைக்கப்படாத பதார்த்தங்களை உட்கொள்ளலாகாது; டைபாயிட் கிருமிகள் உள்ள பழங்களைச் சாப்பிடலாகாது. (12) அம்மை குத்திக்கொள்வது டைபாயிட் சுரத்தைத் தடுக்க முறையான வழியாகும். (13) டைபாயிட் சுரத்தால் பீடிக்கப்பட்டவர்களுடைய மலஜலங்களை அகற்றி அவை காற்றின் மூலமாய்ப் பிறருக்குத் தீங்கிழைக்காதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும். (14) கரண்டிகளைக் கொண்டு சாப்பாட்டைச் சாப்பிடவேண்டும். (15) சுகாதார விதிகள் கவனிக்கப்படாத இடங்களில் சாப்பிடலாகாது. மனிதன் பிரயாணஞ் செய்யும்போது தானாகவே சமைத்துக்கொள்வது நல்லது.

ஹோம் அண்ட் ஹோமியோபதி.

---

# அரச குடும்பச் செலவுத் திட்டம்

## 'சிவில் லிஸ்ட்' ஏற்பட்ட விவரம்.

அரசருக்கும், அரசருடைய குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் அரசருடைய மரியாதைக்குரிய காரியங்களுக்கும் செலவிடப்படும் பணத்தின் ஜாபிதாவுக்குத்தான் கிரேட் பிரிட்டனில் 'சிவில் லிஸ்ட்' என்ற பேர் வழங்கி வருகிறது. இந்த ஜாபிதா, ஓர் அரசர் இறந்து இன்னொரு அரசர் சிங்காதனம் ஏறும்போது மாத்திரம்தான் திருத்தி யமைக்கப்படும்.

ஏழாம் எட்வர்ட் அரசருக்கு ஜனங்களின் வரிப்பணத்திலிருந்து ஆண்டொன்றுக்கு 470,000 பவுன் கொடுக்கப்பட்டு வந்தது. அவர் இறந்தபின், இப்போது இருக்கும் ஜார்ஜ் மன்னர் பட்டத்திற்கு வந்தார். அவருக்கும் அதே தொகைதான் ஆண்டுதோறும் கொடுக்கப்பட்டு வருகிறது. அத்தொகை கீழ்வரும் செலவுகளுக்கெனப் பங்கிடப்பட்டுள்ளது. அரசருடைய சொந்தச் செலவுக்கு 110,000 பவுன், அரச குடும்பத்தைச்சேர்ந்த மற்றவர்களுக்கு 125,800 பவுன்கள், அரண்மனைகளின் செலவுகளுக்கு 193,000 பவுன்கள், சில்லறைச்செலவுகளுக்கு 33,200 பவுன்கள். மீதி 8,000 பவுன்கள்.

ஜார்ஜ் அரசருக்கு முன்னே சொன்ன தொகையல்லாமல் லங்காஸ்டர் பிரதேசத்தின் மூலமாய் 70,000 பவுன் பெற்றுக்கொள்ள விதி ஏற்பட்டிருக்கிறது. வேல்ஸ் இளவரசருக்குக் காரன்வால் பிரதேச வரும்படியே அளவுக்கு மீறியதாய் இருப்பதால் வேறு தொகை ஒன்றும் அவருக்கு இல்லை. அவருடைய கலியாணத்துக்காகப் பணம் தனியாய் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு மனைவி ஏற்பட்டால் அம் மனைவிக்கென வருடந்தோறும் 10,000 பவுன் கொடுக்கப்படவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த மாது தெய்வாதீனத்தால் விதவையாய்விட்டால் அப்பெண்ணிற்கு 30,000 பவுன் கொடுக்கப்படவேண்டுமென்றும் ஏற்பாடாகி யிருக்கிறது. அரசருடைய குமாரர்கள் யுக்த வயதை அடைந்தவுடன் வருடமொன்றுக்கு 10,000 பவுன் வீதம் வாங்குவார்கள். கலியாணஞ் செய்துகொண்டால் ஒவ்வொருவருக்கும் 15,000 பவுன் அதிகம் கொடுக்கப்படவேண்டுமென்று ஏற்பாடாகி யிருக்கிறது. அரசருடைய புத்திரிக்கு 21 வயது முதல் ஆண்டொன்றுக்கு 6000 பவுன் கொடுக்கப்பட்டுவரும்.

மேற் கூறப்பட்ட 'சிவில் லிஸ்ட்' 1688-ம் ஆண்டுமுதல் நடைபெற்று வருகிறது. அப்போது ஆண்டொன்றுக்கு அரசருக்கு 700,000 பவுன் கொடுக்கப்பட்டு வந்தது. அதிலிருந்துதான் தூதர்கள், நீதிபதிகள், சிவில் வேலைக்காரர்கள் ஆகிய இவர்களுடைய சம்பளங் கொடுக்கப்பட்டு வந்தது.

இரண்டாம் ஜார்ஜ் அரசருடையகாலத்தில், ஆண்டொன்றுக்கு 800,000 பவுன் வீதம் கொடுக்கப்பட்டு வந்தது. பின்னர் 900,000 பவுனும் கொடுக்கப்பட்டு வந்தது. 1839-ம் வருஷத்தில் நாலாவது வில்லியம் அரசராய் வந்தபோது 510,000 பவுனுக்குமேல் கொடுக்கப்படுவதில்லையென்று ஒரு வரையறை ஏற்படுத்தப்பட்டது. அதில் ஒற்றர்களைக்கொண்டு வேலை செய்வதற்கான 80,000 பவுன் தவிர மற்றவையெல்லாம் அரசருடைய சொந்தச் செலவுக்காகவே இருந்து வந்தன. விக்டோரியா மகாராணிக்கு ஆண்டொன்றுக்கு 385,000 பவுன் வீதம் கொடுக்கப்பட்டு வந்தது. இதில் ஒற்றர்களுக்கான பணம் சேர்க்கப்படவில்லை.

கவிவாணர்கள், பூதபௌதீக சாஸ்திரிகள், ஆகிய இவர்களில் ஏழைகளாய் இருப்பவர்களுக்குச் சிவில் லீஸ்டிலிருந்து உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும். அதற்கென வருடந்தோறும் 1200 பவுன்கள் ஒதுக்கிவைக்கப்படுகின்றன. 25-பவுன் முதல் 200 பவுன்வரை உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது.

பு-மா-கோ-வே.

## பூர்வகால நாடகங்கள்.

(510-ம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு வேதங்களில் ஒன்றான ரிக் வேதத்தில் நாடகத்தின் சிற்சில அம்சங்கள் காணப்படுகின்றன. இரண்டு அல்லது மூன்று கூட்டத்தார் (பிரிவினர்) சந்தித்தலும், பற்பல விஷயங்களைக் குறித்து வார்த்தையாடலுமான நிகழ்ச்சிகள் அவ்வம்சங்களிற் றென்படுகின்றன. தேவர்களும் மாருதர்களும் சம்பாஷித்தல் அவற்றில் கண்கூடு. ரிக்வேதத்திலுள்ள இந்நாடக வியற்பகுதிகள் ஹிந்துக்களில் ரிக்வேதிகளின் ஆசாரவசதிக்குரிய சடங்குகளில் உச்சரிக்கப்படுவதில்லை. ஏனையவை அநேகமாக வைதீக சந்தர்ப்பங்களில் கொள்ளப்படுகின்றன. கர்னபரம்பரையாகவே வந்துகொண்டுவந்த காரணத்தால் போதனை முறையில் ஆசாரியர்களுடைய அபிப்பிராயங்கட்குத் தக்கவாறு ஸ்லோக ரூபமானவற்றைத் தவிர ஏனைய வசன பாகங்கள் மாறு பட்டுக்கொண்டே வந்து ரிக்வேதம் பிற்காலப் பிராம்மணர்களிடம் நின்றன. தெளிதற்கரிய இந்நாடகப் பகுதியின் விஷயங்களை விளக்குவான் கருதிப் பல சொல்வல்லுநர் முன்வந்தனர். அவர்கள் வசனபாக மற்றுத் தனித்து நின்ற ஸ்லோகங்களைச் சேகரித்துச் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறும், முன்னோருரையின் மூலத்தைக்கொண்டும் ஒருவாறு வசனங்களைத் தாமே யமைத்துக் கோவைபடுத்தினர். பூர்வகிரந்தத்தின் வசனபாகங்கள் கிடைக்காமையாற் சில சரிவர அமைக்கப்படாமற் போயின. ஆனால் பாரம்பரியமாக ரிக்வேத பாராயண மிருந்து வந்து, பின்னர் அவை சம்ஹிதைகளாகத் தொகுக்கப்பட்டு அதன் பிறகு பிராமணர்களால் படனஞ் செய்யப்பட்டு வந்திருப்பதிலிருந்தும் அதன் செய்யுட்பாகம் மட்டும் மாறுபாடின்றி இன்றளவு மிருந்து வருகின்றதெனத் தெளியலாம்.



ரிக், அதர்வ வேதங்களில் 'நிருது' என்ற வார்த்தை வழங்கப்படுகின்றது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்த அஸ்வகோஷன் காலத்தில் நாடகம் அதன் முதிர்ந்த நிலையை யடைந்திருந்ததெனச் சரித்திரம் கூறுகின்றது. சோபவதி யரசனது முன்னிலையிலும் பிம்பசார மன்னனது ஆதரவிலும் 'புத்தசரித்திரம்' என்ற நாடகத்தை மத்யமாகாண நாடகக் கூட்டத்தார் நடித்தன ரென்று அவதான சாஸ்திரம் விளக்குகின்றது. இராமாயணம், மஹாபாரதம், பாரதப்பிரிவான ஹரிவம்சம் முதலிய பூர்வகால காவியங்களில் நடனமென்ற சொற்பிரயோகம் இருப்பதால் மேற்கூறிய சிறந்த கர்த்தாக்களின் காலத்திருந்தே நாடகமாடப்பட்டு வந்திருக்கின்றதெனக் கொள்ளலாம். தசரதச் சக்ரவர்த்தி புத்திர இஷ்டியைக் கருதி அஸ்வமேதயாகஞ் செய்தபோழ்தும், உத்தரகாண்டத்தில் ஸ்ரீராமசந்திரன் அஸ்வமேதயாகஞ் செய்த காலத்திலும் நாடகத்தின் அம்சமான நாட்டியம் நடைபெற்றதாகப் புலனாகின்றது. வேள்விகளிலும், விழாக்களிலும், அரசர் கொலுவிருக்கைகளிலும் நடனம் நிகழ்ந்ததென்று பாரதமும் கூறும். மற்றும் ரிக்வேதம் 1.92-4 லிலும் அதர்வவேதம் 21.1-41 லும் 'நிருத்' என்பது புலப்படுவதால் வேதகாலத்திருந்து, சுமார் மூவாயிர மாண்டுகளுக்கு முன்னரே நாடகம் உலக வழக்கிலிருந்து வருகின்றதென்பது வெள்ளிடை மலைபோல் விளக்கமாம்.

அதர்வ வேதத்தில் ஒரே நிகழ்ச்சியைத் தவிர, ரிக்வேதகாலத்திற்குப் பிற்பட்ட வேதங்களில் நாடக சம்பந்தமான விஷயம் காணப்படவில்லை. அதற்குக் காரணம் ஏனைய வேதங்களில் கர்மாவிதான விஷயங்களன்றி வேறு கலப்பில்லாததேயாம். பிற்கால கவீந்திரர்கள் ரிக்கில் காணப்படுவனவற்றைப் புத்துயிரளித் தமைப்பதிலேயே தமது கருத்தைச் செலுத்தினர். இனிப் பிற்கால நாடகங்களைக் கவனிப்பின் பாஸர், காளிதாஸர் முதலான வரப்பிரசாதிகளியற்றிய சாகுந்தலம், மாளவிகாக்னி மித்திரம், ரகுவம்சம், இராம நாடகம் முதலியனவே சிறந்து விளங்கினவெனலாம். காளிதாஸரின் காலத்திற்குச் சில நூற்றாண்டுகள் பிற்பட்ட பவபூதியென்ற மஹாகவி இயற்றிய மஹாவீர சரிதம், மாலதீ மாதவம் முதலிய நூல்களும் நாடக உலகிற் சிறந்தன. பதஞ்சலிக்குப் பிற்பட்ட மத்யகாலத்தில் வதிந்த கவிகள் 'நாடகங்களை யியற்றியே புகழுற்றன ரென்னில் நாடகம் பாரத பூமியில் எத்துணை முக்கியமாகக் கருதப்பட்டதென நாம் ஊகிக்கலாம். இக்கவிகளியற்றிய காவியங்களில் வர்ணனைகளினழகும், கதைகளின் நீதிகளும், நட்பின் சாதுரியமும், காதலின் மாட்சியும் வெற்றியும் மிக்க சுவைபொருந்தியனவாகும். அக்காலத்திய பெண்மணிகள் அடைந்த கல்வியின் வகையும் இக்காவியங்களில் விளக்கப்படுகின்றன. போஜன்போன்ற மன்னர்கள் இக்கவிகளை ஆதரித்தனரெனவும், இன்னோரால் இயற்றப்பட்ட நாடகங்களைக் கண்டானந்

தித்தனெனவும், போஜ சரித்திரத்திலும் காளிதாஸ், பவபூதி சரித்திரங்களிலும் கூறக்காணலாம். விக்கிரமாதித்யன் நாடகாபிவிருத்தியில் அதிக ஊக்கஞ் செலுத்தினானென அவன் சரித்திரத்தில் கூறப்படுகின்றது. வடமொழியிற் பாண்டித்யமுடைய மேனாட்டறிஞர்களில் மேம்பட்டவரான மார்க்கமூலர் (Max muller) இந்திய நாட்டின் நாடக வியலைத் தெளிவாக விளக்குமொருநூலையும் வரைந்துளார். இதன் சார்பாக ஏனைய மேனாட்டாரின் ஆராய்ச்சி நூல்களும் பல உள.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் நாடகம் அதிக தீவிரமுடன் பாரத பூமியில் நடந்து வந்தது. வேதத்தினின் றெழுந்தமையால் மக்கள் நாடகத்தில் அதிக பக்தி பூண்டொழுகினர். மாரி குன்றிய நாட்களிலும், பஞ்சம் மேலிட்ட காலங்களிலும் பக்தி பூர்வமாகப் புண்ய சரித்திரங்கள் நடிக்கப்பெற்றன. சுமார் எழுபதாண்டுகளுக்கு முன்னர் கிராமங்களில் அரிச்சந்திர நாடகம் பிரபலமாக நடந்ததெனப் பெரியோர் கூறக் கேட்டிருக்கின்றோம். அரிச்சந்திர நாடகமாடுங்காலங்களில் மேகங்கூடி மழை பெய்தனவென்றும் இன்றளவு முள்ள முதியோர் கூறுகின்றனர். இராம நாடகம் பாரத பூமிமுழுவதிலும் பிரசித்தமாகப் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் நடைபெற்றதென மேனாட்டுப் பிராயாணிகள் எழுதி வைத்திருக்கின்றனர். விரிவஞ்சி நாடகத்தின் பூர்வ சரித்திரத்தை இங்கு விட்டு இனி நாடகாலங்காரத்தைக் கவனிப்போம்.

நட, நாடக, நாட்டிய முதலான சொற்களுக்கு நிருத் என்னும் பதமே மூலமானது. ஆதலால் நிருத்யமே நாடகத்தின் முக்கியாம்சமாம். கானம் நாட்டியத்துடன் செய்யப்பட்டாலும், நிருத்யம் அபிநயத்துடனியற்றப் பட்டாலும், அபிநயம் வசனங்களாலும், பிரலாபத்தாலும் அனுசரிக்கப்பட்டாலும் நாடகமாகின்றது. ஆக நாடகமாவது கானம், நிருத்யம், அபிநயம், வசனமாகிய நான்கும் பொருந்தியதாம். கானத்திற்கு ஸ்ருதி மாதாவாகின்றதால் ஸ்ருதியான நாதத்தைக் கிளப்பும் நாத வாத்யங்களும் (தம்பூரா, வீணை, முதலியன) நாத கானத்தை அணைந்து அழகுபடுத்த லயவாத்யங்களும் (மிருதங்கம், டங்கா, பேரி முதலியன) அவசியம். வாத்யங்கள் கானத்தைப் பரிமளிக்கச் செய்யும் தன்மையன வாதலின் நாடகத்திற்கு வாத்யங்கள் அவசியமென்பது போதரும். கானரூபமான கீதங்கள் சரித்திர நிலைக்குத் தக்கவாறு சோகத்தையும், சிருங்காரத்தையும், அளிக்கவல்ல ராகங்களில் அமைந்திருக்கவேண்டும். இதுவரை கானப்பொருத்தம் விவரிக்கப்பட்டது. இனி நிருத்திய இயலைச் செப்புவோம்.

(தொடரும்) துக்குடநகர், ஆத்மநாதன்.

---

# ஆனந்தபோதினியின் வாழ்த்து.

விருத்தம்.

திருவகலா திருந்தோங்குஞ் செந்தமிழ்நந் தனவனத்தின் திலகம் போன்ற
தருவகலா வணியணிப்பூஞ் சாறூறும் ரசவசனச் சம்பிர தாயப்
பருவகலா நிதியாகிப் படிக்குமக்கள் மனத்தார்வம் பரவச் செய்யுஞ்
சருவகலா சாலையென்றே ஆனந்த போதினியைச் சாற்றலாமே.

ஆனந்த போதினியைப் படிப்பவர்க்கா னந்தங்கேட் பவர்க்கா னந்தம்
ஆனந்த போதினியின் சமாசாரம் சொலச்சொலவா னந்த மாகும்
ஆனந்த போதினியைப் பெற்றவருக் கனந்தமா னந்த மாகும்
ஆனந்த போதினியைப் பார்த்தகா லானந்த மமைந்த தானே.

மைந்தருக்குஞ் சிறுமியர்க்கும் வாசகமாம்; அரசருக்கு மனுநூ லாகும்;
சுந்தரியர்க் குயர்கற்பு நூலாகும்; வாணியர்க்கோ துலாக்கோ லாகும்;
எந்திரகற் பனைக்கிசைந்த தத்துவநூல்; தவஞ்செய்வோர்க் கெல்லாஞ் சைவ
மந்திரநூ லாகுமென ஆனந்த போதினியை வாழ்த்து வோமே.

முதுகுளத்தூர்-சித்திரகவி, தெய்வநாயகம் பிள்ளை.

## அறிஞரின் அமுதமொழிகள்.

(525-ம் பக்கத் தொடர்ச்சி.)

83. While man is growing, life is in decrease;
And cradle rock us nearer to the tomb
Our birth is nothing but our death begun

*Young.*

மனிதன் வளர வளர அவனுடைய ஆயுளும் குறைந்துகொண்டு போகிறது. (குழந்தையின்) தொட்டி லாடுவது சவக்குழியை நோக்கிச் செல்வதுபோ லிருக்கிறது. பிறப்பு உண்டான போதே இறப்பும் இருக்கிறது. (எங்)

84. It is pleasant to find real merit appreciated,
Whatever its particular walk in life may be.

*Dickens.*

ஒருவனது புகழ்தற்குரிய மதிப்பு அவனுடைய வாழ்நாளில் எத்தகைய தொழிலினால் ஏற்பட்டிருந்தபோதிலும் உண்மையான மதிப்பைக்கண்டு மெச்சுவதே சந்துஷ்டியாம்.

(டிக்கன்ஸ்)

85. The purest treasure mortal times afford,
Is spotless reputation *Shakespeare.*

ஜீவியகாலத்தில் ஒருவனுக்கு நிலையான பொக்கிஷம் சிறந்த கீர்த்தியேயாம். (ஷேக்ஸ்பியர்)

86. The wisdom of life is in preventing all the evil we can; and using what is inevitable, to the best purpose *Ruskin.*

நம்மால் கூடியவரையில், கெடுதல்களைத் தடுப்பதிலும், அவசியமான காரியங்களையும் நல்லவிதத்தில் முடியும்படி செய்விதிலும் செலுத்தும் விவேகமே விவேகம். (ரஸ்கின்)

87, What is noble? 'tis the finer
Portion of the mind and heart
Linked to something still diviner,
Than mere language can impart.
*Charles Swatne.*

பெருந்தன்மை என்றால் என்ன? அது மனதும் இருதயமும் களங்கமின்றி, எல்லாவற்றிற்கும் மேலானதும் வாக்குக்கும் எட்டாததுமான ஒரு பரம் பொருளுடன் ஐக்கியமடையுஞ் சக்தியேயாம். (சார்லஸ் ஸ்வாட்னி)

88. Be wise;
Soar not too high, to fall; but stoop to rise
*Massinger.*

புத்திசாலித்தனமாய் நடந்துகொள். வீழ்ச்சி யடையும்படி அவ்வளவு பேராசைகொண்டலையாதே, நீ உயர்வடைவதற்கு வணக்கத்தைக் கைக்கொள். (மேஸிஞ்சர்)

89. Depend your reputation, or bid farewell to your good life for ever *Shakespeare.*

உன்னுடைய மானத்திற்குப் பங்கம் வராமல் நடந்துகொள். இல்லாவிட்டால் உன்னுடைய நல்வாழ்க்கைக்கு வந்தனஞ் செலுத்திவிடு (வாழ்வை யொழித்துவிடு). "மானம் படவரின் வாழாமை முன்னிது". (ஷேக்ஸ்பியர்)

(தொடரும்.) A. P. இராமன், B. A.

---

# பிரபஞ்ச அனுபவம்.

(527-ம் பக்கத் தொடர்ச்சி.)

***

கிணற்றுநீர் குளிர் காலத்தில் மிகக் குளிர்ச்சியாயும், கோடை காலத்தில் மிகவும் வெதுப்பாயும் இருக்கும். இவ்வுண்மையைக் கிராமங்களில் உள்ள பலர் நன்கறிவார்கள். அதுபோலவே கதர் உடையானது வெயிற்காலத்தில் குளிர்ச்சியையும் குளிர்காலத்தில் உஷ்ணத்தையும் கொடுக்கிறது. இது உண்மையான அனுபவமாகும். இன்னும் கதர் உடை அணிந்துள்ள ஒவ்வொருவருக்கும் அவ்வுடையானது நம் நாட்டின் ஏழ்மை நிலையையும், நமது அடிமை வாழ்வையும் உணர்த்திக் கூர்மையான புத்தியை உண்டாக்கி விடுகின்றது. கதர் உடை உடுத்துவீர்களா? 'உடுத்தவேண்டும்' என்ற எண்ணத்தை மட்டும் முதலில் உண்டாக்கிக் கொள்ளுங்கள். பிறகு இலகுவாய் உடுத்திவிடலாம். தேசாபிமானம் மக்களுக்கு அவசியம் இருத்தல்வேண்டும்.


***

ஒரு முனிசிபாலிட்டியில் திடீரென வரி உயர்த்தியுங்கூட அப்பீல் மனுக்கள் ஒன்று கூட வரவில்லையாம். இது அந்த முனிசிபாலிட்டியின் சேர்மெனுக்குப் பெரிய அதிசயமாயிருந்ததாம். ஒருநாள் அந்தச் சேர்மேன் ஒரு வரிசெலுத்துவோனைக்கண்டு காரணம் கேட்டபொழுது, அவன் "ஒரு வருடத்து வரியைக் கவுன்சிலர் எலக்ஷன் போது வாங்கிக் கட்டிவிடுகிறோம். மற்றொரு வருடத்து வரியைச் சட்டசபை எலக்ஷன்போது வாங்கிக் கட்டிவிடுகிறோம். மூன்றாவது வருடத்திற்கு தாலுகா போர்டு தேர்தலின் போது வாங்கிக்கட்டிவிடுகிறோம். எங்களுக்கென்ன கவலை? எவ்வளவு வரி போட்டாலும் அக்கரையில்லை" என்று கூறினானாம். இதைக்கேட்ட சேர்மேன் அந்த வார்டு கவுன்சிலரைக் கண்டு நீ ஓட்டர்களுக்குப் பணம் கொடுத்தா வெற்றியடைந்தாய்? என்று கேட்டாராம். அதற்கு கௌன்சிலர், 'நான் முட்டாள் தனமாகப் பணத்தைச் செலவுசெய்து விடவில்லை. தங்களைச் சேர்மெனாகத் தேர்ந்தெடுக்கும் பொழுது, தாங்கள் கொடுத்த ரூபா 1000-த்தில் 900-ம் தான் ஓட்டர்களுக்குக் கொடுத்தேன். மீதி ரூபா 100. கையிருப்பில் இருக்கிறது" என்று கூறினாராம்! உற்று நோக்கி உண்மையுணருங்கள். சேர்மேன் எந்தப் பணத்திலிருந்து கௌன்சிலர்களுக்குக் கொடுத்தாரோ.

***

'பொறுமை' வேறு, 'அசமந்தம்' வேறு; நிதானமான யோசனையுடன் செய்யப்படும் காரியங்களுக்கே 'பொறுமை' யென்று பெயர். ஒன்றுஞ் செய்யாமல் கொட்டாவி விட்டுக்கொண்டிருப்பதற்குத்தான் 'அசமந்தம்' என்று பெயர். பொறுமைக்கும் அசமந்தத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டோ, அவ்வளவு வித்தியாசம் சுறுசுறுப்புக்கும் படபடப்புக்கும் உண்டு! படபடப்பாக வேலை செய்கிறவனைவிடச் சுறுசுறுப்பாக வேலை செய்பவன் எண்மடங்கு மேலானவனாகக் கருதப்படுகிறான்.

கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை, திருச்சிராப்பள்ளி.




ஒரு பெரியவர், எந்தநேரத்திலும் சிறுகுழந்தைகளுடன் விளையாடிக்கொண்டிருப்பது வழக்கம்; குழந்தைகள் அவரைக் கண்டவுடன் தாத்தா தாத்தா என்று சூழ்ந்துகொள்வார்கள்; ஒருவன் அவர் மீசையைப் பிடித்திழுப்பான்; மற்றொருவன் துணியைப்பிடித்திழுப்பான்; அவர்கள் என்ன செய்தாலும் பெரியவர் சகித்துக்கொண்டு அவர்களுடன் விளையாடுவார்; இப்பழக்கத்தினால் சிறுவர்கள் அவரிடம் இன்னதைத்தான் செய்யலாம், இன்னதைச் செய்யக்கூடாது என்னும் கட்டுப்பாடின்றி எதையும் செய்துவந்தார்கள். ஒருநாள் அவர், கோர்ட்டில் நடந்துகொண்டிருந்த தம்முடைய வழக்கிற்குப் போவதற்குப் பத்தரைமணிக்கு அதற்குரிய ரிகார்டுக் கட்டையெடுத்துக்கொண்டு வேகமாய்ப் போனார்; அவருடன் வழக்கமாக விளையாடும் சிறுவர்களில் ஒருவன் ஓடிவந்து அவர் கையிலிருந்த காகிதக்கட்டை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு ஓடினான். பெரியவர், "அடே! அடே!! கோர்ட்டுக்குப் போகவேண்டும்; கட்டைக் கொடுத்துவிடு" என்று அவன் பின் ஓடினார். அச்சிறுவனுக்குக் கோர்ட்டுவிஷயம் முக்கியமானதென்று தெரியாது; தன்னுடைய விளையாட்டையே பெரிதாக நினைத்தான்; தான் அவ்வாறு ஓடுவதால் பெரியவர் மிகவும் சந்தோஷிப்பார் என்று கட்டுடன் விரைந்தோடி அவருக்கு அகப்படாமல் மறைந்துவிட்டான். பெரியவர் திகிலுடன் அங்குமிங்கும் ஓடியலைந்து முடிவில் கோர்ட்டுக்கு ஓடினார்; அங்கே நியாயாதிபதி கூப்பிட்டநேரம் அவர் ஆஜரில்லாததால் அவருக்கு விரோதமாக எக்ஸ்பார்ட்டித் தீர்ப்புச் செய்துவிட்டார். பெரியவர், வாயை மென்றுகொண்டு வீட்டிற்குத் திரும்பினார். அதுமுதல் சிறு பிள்ளைகளின் விளையாட்டைவிட் டொழித்துவிட்டார்.

* *

ஒரு வேதியர், வியாபாரி யொருவரிடம் சென்று, காசு வாங்கும் பொருட்டு "இலக்ஷ்மி கடாக்ஷம் உண்டாகக்கடவது" என்று அக்ஷதை அள்ளிக்கொடுத்தார். அவர், "ஐயரே! இது எதற்காக?" என்று பார்ப்பனரிடம் கேட்டார். பிராமணர் "இதைத் தலையிற் போட்டுக்கொண்டால் சகல ஐசுவரியங்களு முண்டாம்" என்று சொன்னார். வியாபாரி, "எனக்கு ஐசுவரியமிருக்கிறது; நீர் தாம் தரித்திரப்பட்டு வந்திருக்கிறீர்; ஆதலால் நீரே அக்ஷதையைத் தலையிற் போட்டுக்கொள்ளும்" என்று சொன்னார். பிராமணர், "இவனிடம் நம் தந்திரம் பலிக்காது" என்று திரும்பிப்போய் விட்டார்.

* * *

உபாத்தியாயர் ஒருவர், தம்மிடம் படிக்கும் சிறுவர்களுக்கு "நான் உங்களை என் குழந்தைகளைப்போல் நினைத்திருக்கிறேன்; நீங்கள் என்னை, தந்தையைப்போல் பாவிக்கவேண்டும்" என்று உபதேசம் செய்தார். ஒருநாள் உபாத்தியாயர் பாடம் நடத்திக்கொண்டிருக்கும்போது ஒரு பையன், அவருடைய மடியில் படுத்துக்கொண்டு "ஐயா! எனக்குத் தூக்கம் வருகிறது; என் முதுகைக் கொஞ்சம் தட்டுங்கள்" என்றான். உபாத்தியாயர், "என்னடா பயலே! போக்கிரித்தனம் செய்கிறாய்" என்றார். பையன், "நான் தங்களை என் தகப்பனாரென்று நினைத்து உங்கள் மடியிற் படுத்துத் தூங்கத் துணிந்தேன்; நீங்கள் தாமே அவ்வாறு நினைக்கவேண்டுமென்று எனக்கு உபதேசஞ்செய்தீர்கள்" என்றான்.




# கிருஷ்ணஸிங்

அல்லது

# துப்பறியும் சீடன்

## 1-வது அத்தியாயம்

இக்கதையானது ஆனந்தஸிங் தன் தந்தையாகிய பிரக்யாதி பெற்ற துப்பறியும் கிருஷ்ணஸிங் இடம் துப்பறியும் தொழிலைக் கற்றுக்கொண்டு முதல் முதல் பிரவேசித்த குற்றத்தைப் பற்றியதாகும்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் இராஜம் பிள்ளை தன் அறையில் உட்கார்ந்திருக்கும்போது ஒரு போலீஸ் சேவகன் வந்து "அய்யா! யாரோ ஒரு பெரிய மனிதர் தங்களைக் காணவேண்டுமென்று வந்து காத்துக்கொண்டிருக்கிறார்" என்று ஒரு பெயர் எழுதிய சீட்டை அவரிடம் அளித்தான்.

இன்ஸ்பெக்டர் அதைக்கண்டதும் "ஓ! உலோகநாதம் பிள்ளை; அவருக்கு நம்மிடம் என்ன வேலையிருக்கிறது? அவரை யுள்ளே யழைத்துவா" என்றார்.

சற்றுநேரத்திற்குள் மெலிந்த ஒரு மனிதன் அறைக்குள் வந்ததும் "தாங்கள் தானே துப்பறியும் இலாகாவிற்குத் தலைமை வகித்திருக்கும் இராஜம் பிள்ளை? எனக்கு உம்முடைய உதவிவேண்டும். நான் செல்வவந்தன். தாராளமாகத் தங்களுக்கு நல்ல பரிசளிப்பேன்" என்றான்.

இன்ஸ்பெக்டர் அந்த ஆளைநோக்கி "உம்மைப்பற்றி எனக்குப் பூரணமாய்த் தெரியுமாதலால் தாங்கள் ஒன்றும் விவரம் கூறவேண்டாமென்று கையால் சமிக்கைசெய்தார்.

உலோகநாதம்பிள்ளை "நான் தங்களுக்குக் கூறப்போவது அந்தரங்கமான சமாசாரம்" என்றார்.

இன்ஸ்பெக்டர்:—"ஆம் ஆம்; என்னுடைய உத்தியோக முறைமையான தொழிலில் சம்பந்தப் [illegible]" என்றார்.

உலோகநாதம் பிள்[illegible] "ஆம் ஆம்; நான் கேட்பதும் அவ்வளவே" என்று கூறிவிட்டு அ[illegible] இரண்டொருதரம் உலவிவிட்டு "நான் யாரென்று நீ தெரிந்து [illegible]டாயோ?" என்று கேட்டார்.

இன்ஸ்:—"ஆம். மேட்டு வீதியில் வசிக்கும் பிரபலமான பாங்கிக்காரர் தாங்கள்" என்ருர்.

உலோக:—ஆம் ஆம். நானும் என் மனைவி, என் ஏகபுத்திரியுமே என் குடும்பம். அந்தோ! என் புத்திரி போய்விட்டாள். என் ஏகபுத்திரியாகிய மனோன்மணி எங்கோ போய் விட்டாள். அய்யோ கடவுளே! என் மகளை மட்டும் கண்டு பிடித்து என்னிடம் கொண்டுவந்து விட்டுவிடு. பிறகு உனக்கு வேண்டிய பரிசை நீயே யிவ்வளவென்று கூறிவிடு. நான் அதற்கு எள்ளளவு ஆட்சேபனையும் கூறமாட்டேன்.

இன்ஸ்பெக்டர் இராஜாராம் இத்தகைய வியாகூலமான விஷயங்களில் எத்தனையோ கண்டிருக்கிருர். அப்படியிருந்தும் இந்தச் சங்கதியைக் கேட்டதே யவர் மிக்க பரிதாபமடைந்து மிக்க சாந்தத்தோடும் அன்போடும் பின் கண்டபடி கேட்டார். அதாவது:—"தங்கள் புத்திரி எங்கோ போய்விட்டாளென்கிறீர்களே, அவள் இன்ன விடத்திற்குச் செல்கிறேனென்று சற்றும் உளவுவைத்து விட்டுச் செல்லவில்லையோ?" என்று வினவினுர்.

உலோக:—இல்லை; ஒரு சங்கதியுமில்லை. இன்று பிற்பகல் ஆரம்பத்திலேயே யெங்கோ சென்ருள். இன்னும் திரும்பி வரவேயில்லை. அவள் தன் சினேகர் யாரிடமாவது சென்றிருப்பாளென்று நாங்கள் நினைத்துக் கொண்டு மூடத்தனமாய் மாலைப் போசன வரையில் வருவாளென்று எதிர்பார்த்துக்கொண் டிருந்தோம். அதன் பிறகு அவள் வழக்கமாய் எங்கெங்கு செல்வதோ அங்கெல்லாம் தேடிப்பார்த்தோம்; ஒருவரேனும் அவளைக் கண்டதாய்க் கூறவில்லை.

இன்ஸ்:—"அவள் வீட்டை விட்டுச் செல்வதற்கு ஏதாவது காரணமிருக்கிறதென்று தங்களுக்குத் தெரியுமோ?" என்று வினவினுன்.

உலோக:—இல்லை. ஒரு காரணமுமில்லை. நாங்கள் ஒருவரையொருவர் பிராணனைப்போல் நேசித்திருப்பவர்கள்.

இன்ஸ்:—இருக்கட்டும், இன்ஞெரு கேள்வி; அதற்காகத் தாங்கள் கோபிக்கலாகாது. அப்பெண் யார்மேலாவது காதல் கொண்டிருக்குமோ? ஏதேனும் காதற் சம்பந்தமான விவகாரம் இருக்குமோ?

உலோக:—நீர் கேட்டது எனக்குத் தெரிகிறது. அதாவது அவள் யார் மேலாவது காதல் கொண்டிருந்து அதற்கு நாங்கள் அவளைக் கண்டித்தோமா அல்லது அவன்மேல் காதல் கொள்ளலாகாதென்று கட்டளையிட்டோமாவென்று கேட்கிறீர்கள். அப்படி யென்றுமே நடக்கவில்லை. அவள் பிரியப்பட்ட ஒரு வாலிபனுக்கே அவளை மணம் செய்து கொடுப்பதாய் வாக்களித்திருக்கிறேம். நாங்கள் அவனைப் பாலியத்திலிருந்தே யெங்கள் புத்திரன்போல் நேசித்து வருகிறேம். அவன் ஏழையே யெனினும் நல்ல யோக்கியன். விர்த்திக்கு வரக்கூடியவன். என் புத்திரியும் அவனும் பரஸ்பரம் பூரண அன்புடையவர்களாகவே யிருக்கிருர்கள். அவர்களுக்குள் எப்போதும் என்னளவு மனஸ்தாபங் கூட நேர்ந்தது கிடையாது.

18748

இன்ஸ்:—அப்படியாயின் [illegible] சென்ற விஷயமாய்க் கொஞ்சம் உளவு[illegible]தங்களுக்குத் [illegible]ா?

லோக:—ஒன்றுமே [illegible]து.

(தொடரும்) ஆரணி-கு[illegible]மி முதலியார்.